வானவில்
VAANAVIL
இதழ் 134 மாசி 2022
ISSUE 134 FEBRUARY 2022

# மாகாண சபைகளைப் பாதுகாத்து பலப்படுத்த வேண்டும்!




இலங்கை தமிழ் அரசியல் அரங்கில் மாகாண சபைகள் பற்றிய விடயம் மீண்டும்சூடு பிடித்துள்ளது.

இலங்கை அரசியலில் இனம், மொழி, மதம் சம்பந்தப்பட்ட விடயங்கள் எப்போதுமே முக்கிய பேசுபொருள்களாக இருந்து வந்துள்ளன. இதில் முக்கியமாக தமிழ் மக்களின் இன மற்றும் மொழிப் போராட்டங்கள் முக்கியமான இடம் பிடித்து வந்துள்ளன.

1957 இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட 'சிங்களம் மட்டும்' சட்டம் மூலம் மொழிப் பிரச்சினை தீவிரம் அடைந்தது. அது பின்னர் சுமார் 30 வருடங்கள் கழித்து முடிவுக்கு வந்தது.

ஆனால், இனப் பிரச்சினை சம்பந்தமான தீர்வு இன்னமும் அனுமான் வாலாக இழுபட்டுச் செல்கிறது. நாட்டை ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தமது ஆட்சிக் காலங்களில் தமிழ் தலைமைகளுடன் இனப் பிரச்சினை குறித்து சில ஒப்பந்தங்களைச் செய்த போதிலும் அவை எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. இனவாதமே ஆட்சிக்கு வருவதற்கான குறுக்கு வழியாக இருந்ததால், ஆட்சியில் இருக்கும் கட்சி தமிழர் தரப்புடன் இனப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு தீர்வுக்கு வந்தால், எதிரணியில் இருக்கும் பிரதான கட்சியோ அல்லது கட்சிகளோ சேர்ந்து அதைக் குழப்புவது ஒரு வழமையாக இருந்தது. அது மாத்திரமின்றி, வெளியில் உள்ளவர்கள் குழப்பாமல் ஒப்பந்தத்தைச் செய்த ஆட்சியாளர்களே தம்மால் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தாமல் தட்டிக் கழித்த வரலாறும் உண்டு.

இந்தச் சூழ்நிலையில்தான் 1976 இல் தமிழ்த் தலைமை 'தமிழ் மக்களுக்கென ஒரு தனிநாடு அமைப்பதே தமிழர்களின் பிரச்சினைக்கான ஒரே தீர்வு' என்ற தூரதிருஸ்டி அற்ற முடிவை எடுத்து அதை நோக்கிப் போராடும்படி தமிழ் இளைஞர்களைத் தூண்டிவிட்டது. அந்தச் சூழ்நிலையில் 1977 இல் ஆட்சிக்கு வந்த அமெரிக்கா சார்பான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு, ஒரு பக்கத்தில் தமிழ் மிதவாத தலைமையுடன் கூடிக்குலாவிக் கொண்டு, மறு பக்கத்தில் தமிழ் இளைஞர்களின் போராட்டங்களை ஒடுக்குவது என்ற போர்வையில் தமிழ்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ஐரோப்பாவில் யுத்தத்தைத் திணிக்கும் நேட்டோ!

அமெரிக்கா தலைமையில் நேட்டோ நாடுகளின் விமானக்குண்டு வீச்சுகளுடன் 1999 ஆம் ஆண்டு மாரச்சில் ஆரம்பமாகிய செர்பியா – கொசோவோ யுத்தத்திற்குப் பின்னர், ஐரோப்பாவில் 2013 ஆம் ஆண்டிலிருந்து ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் போர் ஒன்றினை மூட்டிவிட நேட்டோ நாடுகள் துடியாய்த் துடிக்கின்றன. ரஷ்யா – உக்ரைன் யுத்தம் என்பதை ரஷ்யாவிற்கும் ஏனைய ஐரோப்பிய ஒன்றிய – நேட்டோ நாடுகளுக்குமான யுத்தமாக விஸ்தரித்து, ரஷ்யாவை யுத்தத்தில் தோற்கடிக்கலாமென அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உட்பட, மேலும் பல நேட்டோ நாடுகள் எண்ணுகின்றன. ஆனால் இந்த எண்ணத்திற்கு முழுமையாகத் துணைபோக ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் இதுவரையில் மறுத்து வருகின்றன என்ற உண்மையையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

1990 – 1991இல் சோவியத் ஒன்றியம் உடைவதற்கு முன்புவரை உக்ரைன் சோவியத் ஒன்றியத்தில் உறுப்பு நாடாக அங்கம் வகித்தது. பின்னர் சோவியத் ஒன்றியம் உடைந்து 15 நாடுகளாக உருவெடுத்தபோது, உக்ரைன் சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து 1991 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 24ஆ திகதி தனிநாடாகியது. நிலப்பரப்பளவில் ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய நாடாகிய உக்ரைன், தன்னுடைய எல்லைகளை ரஷ்யா, பெலருஸ், போலந்து, சிலோவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா, மோல்டோவா போன்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்கின்றது.

உக்ரைன் மொழி பேசுபவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடாக உக்ரைன் இருக்கின்ற போதிலும், கலாச்சாரம் மற்றும் வரலாற்று ரீதியாக ரஷ்யாவோடு நெருக்கமான தொடர்பு கொண்ட நாடாகவும் உள்ளது. அத்தோடு ரஷ்ய மொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதாக உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப்பகுதி விளங்குகின்றது.. அதனால் அவர்கள் ரஷ்ய தேசிய உணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

2010 ஆம் ஆண்டு உக்ரைனில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் விக்டர் யனுகொவிச் (Viktor Yanukovych) ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முன்னர் இவர் மூன்று தடவைகள் உக்ரைன் பிரதமராகவும் பதவி வகித்தவர். அவரது ஜனாதிபதி பதவிக் காலம் 2015 வரை இருந்த போதிலும், அவரது ஆட்சிக்கு எதிராக 4 மாத காலமாக உக்ரைனின் தலைநகரில் (Kyiv) ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆ திகதி அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். பின்னர் அவர் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்தார்.

விக்டர் யனுகொவிச் ஜனாதிபதி பதவியிலிருந்து தூக்கியெறியப் பட்டமைக்கான காரணம், ஐரோப்பிய ஒன்றியத்துடனான பொருளாதார ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தில் உக்ரைன் கையெழுத்திடுவதில்லையென அவர் எடுத்த முடிவே என்று கூறப்படுகின்றது. எனினும், அவர் நேட்டோ – ஐரோப்பிய ஒன்றிய சிந்தாந்தங்களுக்கு தலையாட்டும் பொம்மையாக இருக்கவில்லை என்பதே முக்கியமான காரணமாகும். ஆர்ப்பாட்டக்காரர்களின் “தந்தையர் நாடு கட்சி” என்ற பெயரிலான வலது சாரி மற்றும் நவ நாசிப் (Neo Nazi) பின்னணி கொண்ட கூட்டணிக்கு, அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய ஒன்றிய – நேட்டோ நாடுகள் தங்களது முழு ஆதரவையும் வழங்கியிருந்தார்கள்.

விக்டர் யனுகொவிச் பதவியகற்றப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில், உக்ரைனின் தெற்குப் பகுதியில் உள்ள கிரீமிய தீபகற்பத்திற்கு தனது படைகளை அனுப்பியது ரஷ்யா. கிரீமியா 1954 இல் சோவியத் ஒன்றியத்தால் உக்ரைனுக்கு வழங்கப்பட்டது. கிரீமியா நாடாளுமன்றம் உக்ரைன் ஆட்சி மாற்றத்தை தாங்கள் ஏற்கவில்லை என்றும் தாங்கள் உக்ரைனிலிருந்து பிரிந்து ரஷ்யாவுடன் இணைந்து கொள்ளப் போவதாகவும் தீர்மானம் நிறைவேற்றியது. அத்துடன் கிரீமியா தேசத்து மக்களின் கருத்து அறிய 2014 மார்ச் 16 அன்று கிரீமியாவில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றினை நடத்தியது. அந்த வாக்கெடுப்பில் 96.7% மக்கள் உக்ரைனிலிருந்து பிரிந்து போவதை ஆதரித்தார்கள்.

மேலும் கிழக்கு உக்ரைனில் ரஷ்ய எல்லையையொட்டிய டொன்பாஸ் (Donbasss) பிராந்தியத்தில் லுகான்ஸ்க் (Lugansk), டொனெஸ்க் (Donetsk) குடியரசுகளாக பிரகடனப்படுத்தி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ரஷ்ய இனப்போராளிகளுக்கு ரஷ்யா தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றது . இதுதான் ரஷ்யா – உக்ரைன் போராக உருவெடுத்தது. ரஷ்ய இனப் போராளிகளுக்கும் உக்ரைன் இராணுவத்துக்கும் இடையில் இருபதுக்கும் மேற்பட்ட தடவைகள் போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. இந்தப் போரில் இதுவரையில 14,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2019 ஆண்டு ஏப்பரலில் நடைபெற்ற உக்ரைன் ஜனாதிபதித் தேர்தலில் நகைச்சுவை நடிகர் வொலோடிமைர் ஜெலன்ஸ்கி (Volodymyr Zelensky) ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர்தான் இன்றைய நெருக்கடிக்கான காரணம். நேட்டோவிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் இணைந்துவிடத் துடிக்கும் இவரை, ரஷ்யாவிற்கு நெருக்கடி கொடுப்பதற்கு தமக்கு ‘சரியான ஆள்’ கிடைத்துள்ளதாகக் கருதி மேற்குலகம் செயற்பட்டு வருகின்றது.

ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையில் பூகோள ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உக்ரைன் அமைந்திருப்பதால், அந்த இடத்தில் நேட்டோ படைகள் வருவதை ரஷ்யாவால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதனால் உக்ரைன் எல்லையையொட்டி ரஷ்யாவிலும் பெலருஸிலும் ரஷ்யப்படைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் கனடா உக்ரைனிற்கு ஆயுதங்களை வழங்கி நெருக்கடியைத் தீவிரப்படுத்தி வருகின்றன. அத்தோடு ‘ரஷ்யா இதோ உடனடியாக உக்ரைனை ஆக்கிரமிக்கும்’ என தினமும் அறிவிப்பதோடு நின்று விடாது, உக்ரைன் மீது படையெடுத்தால் ரஷ்யா மீது பாரிய அளவிலான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுமெனவும் அவர்கள் மிரட்டி வருகின்றார்கள்.

பனிப்போர் காலகட்டத்தின் பின்னர் ரஷ்யாவை இலக்கு வைத்தே நேட்டோவில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இணைக்கப்படுகின்றன என்பது வெளிப்படையான உண்மை. ஐரோப்பிய நாடுகளுக்கு முதலாம், இரண்டாம் உலகப்போர்களின் அனுபவங்கள் நிறையவே உள்ளன. ரஷ்யாவுடனான மோதலால் நேரடிப் பாதிப்புக்குள்ளாவது ஐரோப்பிய நாடுகளே என்பதை அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் நன்கு தெரிந்து கொண்டே மோதலைத் தூண்டி வருகிறார்கள். இதனை ஐரோப்பா புரிந்து நடந்தால் போதுமானது.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*

# இயற்கை விவசாய முயற்சி ஜனாதிபதியின் தேர்தல் வாக்குறுதிக்கமைய முனனெடுத்துச் செல்லப்படுகிறது!

***- விவசாய திணைக்கள பணிப்பாளர் நாயகம் கூறுகிறார்!!***

**இ**லங்கை மக்களின் விவசாய முயற்சிகள் சம்பந்தமாக இலங்கை விவசாய திணைக்கள பணிப்பாளர் நாயகம் டொக்டர் அஜந்தா டி சில்வா (Dr.Ajantha de Silva) கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் முக்கியமான பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**அரசாங்கம் பெருந்தொற்று நிலவும் சூழலில் தவறுதலான வழியில் இயற்கை விவசாய முறையை அறிமுகப்படுத்தியமை அதன் நற்பெயருக்கு பங்கத்தை ஏற்படுத்தியுள்ளதா?**

**பதில்:** இந்த நடவடிக்கை ஜனாதிபதி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டு அதற்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர் இயற்கை விவசாயம் பற்றியும், அதை எவ்வாறு படிப்படியாக மீட்டெடுப்பது என்பது குறித்தும் பேசியிருந்தார். உண்மை, ஒரு கால வரையறை குறிப்பிடப்பட்டிருந்தது. எப்படியிருந்த போதிலும், ஜனாதிபதி அந்தப் பாதையில் செல்லப் போவதாகக் குறிப்பிட்டிருந்தார். எனவே, இதில் அவசரப்படுவதற்கு ஒன்றுமில்லை.

**உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்தும், இந்தப் பிரச்சினை இதுவரை தீர்க்கப்படாதது குறித்தும் உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** பெரும்போக வேளாண்மையை எடுத்துக் கொண்டு பார்த்தீர்களானால், இது பருவ மழை மழையின் நடுப்பகுதியில் ஆரம்பித்து, மழை வெள்ளம் விவசாயப் பகுதிகளை நிரப்பிய பின் வேளாண்மைக்காக வான் கதவுகள் திறந்து விடப்படும். அந்தப் போகத்தை நிர்வகிக்கும் இரண்டு பிரதான விடயங்கள் இவையாகும். பொதுவாக பருவமழை செப்ரெம்பர் 15 இல் ஆரம்பித்து ஒக்ரோபர் 8 வரை அல்லது அதற்கு மேலமோ தொடரும். இந்த மழை ஆரம்பித்த பின்னர் இந்த



**Dr.Ajantha de Silva**

நேரத்தில் சோளப் பயிர்ச் செய்கை ஆரம்பிப்பதையும் நாம் காணலாம்.

அதே நேரத்தில் பொதுவாக நெல் பயிரிடுவதற்காக நிலத் தயாரிப்பு வேலைகளும் சம காலத்தில் நடைபெறும். நெல் உற்பத்தியை எடுத்துக் கொண்டால், நிலத்தைத் தயார் படுத்துவதற்கு 30 முதல் 35 நாட்கள் வரை தேவைப்படும். பயிர்ச் செய்கை அதன் பின்னர் ஆரம்பமாகும். இந்த நிலைமையில் பெரும்பாலும் உரத்தின் தேவை ஒக்ரோபர் கடைசியில் எழும். மக்கள் இப்பொழுது வேலையை ஆரம்பிக்காத போதிலும், பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் ஆரம்பிக்காததால் ஏற்பட்டுள்ள நிலைமையை இட்டு அவர்கள் அச்சமடைந்துள்ளனர் என நான் நினைக்கிறேன்.

நாங்கள் இந்தியாவிலிருந்து நனோ நைட்ரோயினையும், லித்துவேனியாவிலிருந்து (Lithuania) பொட்டாசியம் குளோரைட்டையும் பெற்றுள்ளதுடன், இயற்கை விவசாயத் தயாரிப்புக்காக நிதியையும் பெற்றுள்ளோம். வேலையை ஆரம்பிப்பதற்கு எமக்கு பச்சை விளக்கு காட்டப்பட்டுள்ளது. அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் பொறுப்பேற்றுள்ளது. சிலர் தமக்குத் தேவையான உரத்தை எவ்வாறு பெறுவது என்பது குறித்து அறியாமல் இருப்பதால் அதுவே அவர்களது கவனக் குவிப்பாக இருக்கிறது. வேறு சில குழுக்கள் உள் நோக்கத்துடன் குற்றச்சாட்டுகளை முன் வைக்கின்றனர்.

**உள் நோக்கம் என நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?**

**பதில்:** அரசியல் நோக்கம் உள்ளவர்கள் இயற்கை விவசாயத்துக்குச் செல்ல விரும்பாததுடன், எதிர்ப்பிலும் ஈடுபடுகின்றனர். நான் திட்டவட்டமாகக் கூறாவிடினும், உண்மையான நபர்களும் அரசியல் உள் நோக்கமுள்ளவர்களுடன் இணைந்து நின்று எதிர்ப்பில் ஈடுபடுகின்றனர்.

**விவசாய அமைச்சு செயலாளரின் கூற்றுப்படி, இரசாயன உர இறக்குமதித் தடைக்கான வர்த்தமானி அறிவித்தல் தவறான தகவலை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. இரசாயன உரத்தின் மீதான தடை பற்றிய உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** நான் அவருடன் உரையாடினேன். அவர் விவசாயம் பற்றிய பரந்த அறிவுள்ளவர். தன்னைப் செவ்வி கண்டவர் தான் உண்மையில் சொன்னதை தவறாக வியாக்கியானம் செய்துள்ளார் என அவர் என்னிடம் கூறினார். இயற்கை விவசாயம் ஒரு நல்ல முயற்சி என அவர் என்னிடம் கூறினார். அவர் சில விடயங்களைச் சொல்ல விரும்பிய போது அது இறுதியில் 'அரசியல் நோக்கமுடைய' அறிக்கையாக மாறியுள்ளது.

**அப்படியானால் இரசாயன உரம் மீதான தடை பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** இது ஒரு சவாலுக்குரிய நடவடிக்கை. இது நல்லதோ அல்லது கெட்டதோ என என்னால் கூற முடியாது. ஆனால் நாங்கள் முன்னே சென்று சில சாதகமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இலங்கை விவசாயத் துறைக்கு சில நல்லனவற்றைச் செய்ய முடியும்.

**இயற்கை மற்றும் செயற்கை உரங்கள் இரண்டையும் பயன்படுத்தலாம் எனக்**

**சொல்கிறீர்களா?**

**பதில்:** இல்லை. ஆனால், நாம் ஒரு அரசாங்க நிறுவனம் என்ற வகையில் அரசாங்கம் முன்மொழிபவற்றை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. நான் அரசாங்க உத்தரவை நடைமுறைப்படுத்துகிறேன். அந்த வகையில், அரசாங்கம் முன்னெடுத்துள்ள இந்தத் திட்டத்துக்காக என்னால் முடிந்தளவு பணியாற்றுகிறேன். இதை நடைமுறைப்படுத்துவதற்காக என்னிடம் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இருந்து பெறப்பட்ட உபாயங்கள், நடவடிக்கைத் திட்டங்கள், தொழில்நுட்பம் என்பன உள்ளன.

**இது ஒரு வெற்றிகரமான செயற்பாடு என நீங்கள் கருதுகிறீர்களா?**

**பதில்:** ஏன் இல்லை? அதனாலேயே நான் அந்தப் பாதையில் பணியாற்றுகிறேன்.

**செயற்கை உரத்தை இறக்குமதி செய்வதில்லை என்பதில் அரசாங்கம் மிகவும் தெளிவாக இருக்கின்றது. ஆனால், யூரியா (Urea) செயற்கையானது என்பதுடன், அதைவிட முக்கியமானது நனோ யூரியாவும் செயற்கையானது. இந்த மாறுபாடான நிலைமைக்கு என்ன காரணம்?**

**பதில்:** உண்மையில் யூரியா செயற்கை உற்பத்தி. அது சரியானது. நீங்கள் இந்தியாவிலிருந்து வந்துள்ள நானோ நைட்ரோயினைப் பார்த்தீர்களானால் அது ஒரு நானோ உற்பத்தி. அதுதான் இதன் விசேடம். எனவே, இதை நாங்கள் இயற்கையான அல்லது செயற்கையான உற்பத்தி என்றோ சொல்ல முடியாது. நாங்கள் இதை அந்த வகையில் போட்டுப் பார்க்க முடியாது. இது ஒரு விசேடமான மாதிரி. நீங்கள் உரமாக எடுத்துப் பார்த்தால் இது ஒரு விசேட மாதிரி.

**யூரியா உலகில் பாதுகாப்பான உரங்களில் ஒன்றாகும். ஏன் மக்கள் அதைக் கொண்டு வரக்கூடாது என்கின்றனர்? யூரியா ரொக்சிக் (Toxic) என்றால், ஏன் நானோ யூரியா அனுமதிக்கப்பட்டுள்ளது?**

**பதில்:** நீங்கள் யூரியாவை எடுத்துப் பார்த்தால் இலங்கையில் அதைப் பயன்படுத்தும் ஒரு முறை இருக்கிறது. யூரியா பாரபட்சமின்றி பயன்படுத்தப்படுகிறது. இது எல்லா இடமும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. மறு பக்கத்தில், இது தண்ணீருடன் கலந்து பயன்படுத்தப்படும் போது, உடலையும், தண்ணீரையும், விவசாய நிலங்களையும் மாசு படுத்துகிறது. இதை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தும் போது, மக்களின் உடல் நலத்தைக் கெடுப்பதுடன், விவசாய நிலத்தையும் மாசு படுத்துகிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதனுடைய ஆற்றல் மிகக் குறைவானது எனத் தெரிய வருகிறது. எனவே, ஆற்றல் வாய்ந்த உரங்களைப் பயன்படுத்துவதைப் பின்பற்றுவதே அதற்கான வழியாகும். அல்லது பாதையை மாற்ற வேண்டும். அந்த நடவடிக்கையையே அரசாங்கம் எடுத்துள்ளது.

**சீனாவின் Qingdao Seawin உரக் கொம்பனியால் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட உரம் ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவில்லை என இலங்கை உரக் கொம்பனி லிமிட்டெட் சீன நிறுவனத்துக்கு அறிவித்துள்ளது. இரு தடவைகள் அந்த உரத்தின் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் அதை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டது. இந்த விடயம் குறித்து உண்மையில் என்ன நடந்தது என்பதை நீங்கள் எங்களுக்குக் கூற முடியுமா?**

**பதில்:** சீனக் கொம்பனி இயற்கை உரத்தை இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு எவரும் அனுமதி வழங்கவில்லை. அனுமதிப் பத்திரம் வழங்கும்படி எவரும் என்னிடம் கேட்கவில்லை என நான் திட்டவட்டமாகக் கூறுவேன். நான் அறிந்தது என்னவென்றால், அவர்களே சொந்தமாக முடிவெடுத்திருக்கிறார்கள். தேசிய தாவர தொற்றுத் தடுப்பு சேவை (National Plant Quarantine Service) அனுப்பி வைத்த கடிதத்தில் அந்தக் கப்பலில் வந்த உரம் சில பாதகமான நுண்ணுயிரிகளைக் கொண்டிருப்பதால் இறக்குமதிக்கான தகுதியைக் கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்திருந்தது. அதனால் எம்மால் அனுமதி வழங்க இயலாமல் போயிற்று.

இதன் அடிப்படையில் தேசிய உர செயலகம் (National Fertiliser Secretariat) சீனாவில் உள்ள உரக் கொம்பனியுடன் பேசியது. அந்த சீனக் கொம்பனியின் உள்ளூர் பிரதிநிதி இந்தக் கப்பல் விவகாரத்தை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என தனது தலைமையகத்திற்கு அறிவித்தார். அந்த அறிவிப்பு வந்த பின்னரும் அந்த சீன கொம்பனி உரத்தை இலங்கைக்கு அனுப்ப முயன்றது. இது சரியான நடவடிக்கை அல்ல.

**அந்தக் கப்பல் இலங்கையை நோக்கி வருவதாகச் சொல்லப்படுவது உண்மையா?**

**பதில்:** நானும் கேள்விப்பட்டேன். ஆனால் இங்கு வருவது பற்றிய திட்டவட்டமான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. எனக்கு இது பற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

**தமது இயற்கை உரம் பற்றிய பரிசோதனை தவறானது என சீனா கூறுகிறது. பரிசோதனை சந்தேகத்திற்கிடமானது என சீனா தெரிவித்துள்ளது. அதற்கு சாத்தியமுள்ளதா?**

**பதில்:** அவர்களுக்கு இந்த விடயத்தில் பிரச்சினை இருப்பின், அவர்கள் இதை தேசிய தாவர தொற்றுத் தடுப்பு முறைமையை நிர்வகிக்கும் ஐக்கிய நாடுகள் உணவு விவசாய அமைப்புக்கு (United Nations Food and Agriculture Organization) எடுத்துச் செல்லலாம். அவர்கள் இந்தப் பிரச்சினையை இலங்கையிடம் கொண்டுவரக் கூடாது.

**லித்துவேனியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொட்டாசியம் குளோரைட் (Potassium Chloride) இயற்கையானதா அல்லது இரசாயன ரீதியானதா? அது என்ன?**

**பதில்:** பொதுவாக இயற்கையான கனிமமான பொட்டாசியம் குளோரைட்டை நாம் முன்னர் இயற்கை விவசாயத்திலும், இராசயன முறையிலான விவசாயத்திலும் பயன்படுத்தி வந்திருக்கிறோம். நாங்கள் பொட்டாசியம் குளோரைட்டை ஒரு கனிமம் என்ற வகையில் நீக்குகிறோம் அல்லது பயன்படுத்துகிறோம். தேசிய உர செயலகம் பொட்டாசியம் குளோரைட்டை ஒரு இயற்கை கனிமமாக வரையறுத்துள்ளதால் அதை நாம் இயற்கை விவசாயத்துக்காகப் பெற்றுள்ளோம்.

**அப்படியானால் இது செயற்கையானது அல்ல?**

**பதில்:** இந்த விடயத்தில் அப்படி இல்லை.

**ஏன் லித்துவேனியாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் இறக்குமதி செய்த உரங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்க முன்னர் பரிசோதிக்கவில்லை? ஏதாவது புதிய உரங்கள் இலங்கையில் இரு தடவைகள் சோதிக்கப்பட்டுள்ளனவா?**

**பதில்:** யார் சொன்னது இரு தடவைகள் பரிசோதிக்கப்பட்டன என்று? மாதிரிகள் சோதிக்கப்பட்டன. இலங்கையில் பொட்டாசியம் குளோரைட் இறக்குமதி செய்வதற்கு முன்னர் சோதிக்கப்பட்டது. விவசாய இலாகா அதைப் பல தடவைகள் செய்துள்ளது.

**லித்துவேனியா உரம் நேரடியாக கிழக்கு மாகாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதா?**

**பதில்:** அது பரிசோதிக்கப்பட்டது.

**நானோ யூரியாவில் நைட்ரோயின் எத்தனை சத வீதம் உள்ளது?**

**பதில்:** 4 சத வீதம்

**லித்துவேனியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயற்கை பொட்டாசியம் என்று கூறப்படுவதில் எத்தனை சத வீதம் பொட்டாசியம் உள்ளது?**

**பதில்:** நான் அதற்குச் செல்ல விரும்பவில்லை.

**லித்துவேனியா பொட்டாசியம் குளோரைட்டை உற்பத்தி செய்கிறதா?**

**பதில்:** ஆம், அவர்கள் செய்கிறார்கள்.

**பொட்டாசியம் குளோரைட் உலகச் சந்தையில் ஒரு மெட்ரிக் தொன் 300 டொலருக்கும் குறைவாக இருக்கையில் ஏன் ஒரு சிங்கப்பூர் கொம்பனியிடமிருந்து 478.50 டொலருக்கு நாம் இறக்குமதி செய்கிறோம்?**

**பதில்:** குறிப்பிட்ட நிறுவனங்கள் முறையான விதிகளைக் கடைப்பிடிப்பதால் நாம் அவற்றைத் தெரிவு செய்கிறோம். தெரிவுகள் ஒரு நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி வளங்களின் அடிப்படையைக் கொண்டிருக்கும். சில நிறுவனங்கள் அத்தகைய நெறிமுறைகளைக் கொண்டிருக்காத போது, நாம் எப்படி அவற்றைத் தெரிவு செய்ய முடியும்?

**இந்த உர நெருக்கடி எப்பொழுது முடிவுக்கு வந்து, மக்களின் கிளர்ச்சி நிற்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் எல்லோருக்கும் உரம் உரிய காலத்தில் கிடைப்பதை உத்தரவாதம் செய்ய முடியுமா?**

**பதில்:** ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் எம்மால் இதைத் தீர்க்க முடியும். நானோ உரம் வந்துள்ளது. நாம் கட்டம் கட்டமாக 3.1 மில்லியன் லீட்டர் நானோ நைட்ரோயினைப் பெறுவோம். நாம் இதே வழிமுறையில் ஏற்கெனவே பொட்டாசியம் குளோரைட்டை விநியோகிக்க ஆரம்பித்து விட்டோம். பெரும்பாலும் அடுத்த வாரமளவில் உர விநியோகத்தை முடித்து விடுவோம்.

**(விவசாய பணிப்பாளர் நாயகத்தின் இந்தப் பேட்டி 2021 ஒக்ரோபர் 23 ஆம் திகதி கொழும்பு ஊடகமொன்றில் வெளிவந்ததாகும்.)**

# உலக நாடுகளின் கடவுச் சீட்டு தரப்படுத்தல் வரிசை



ஹென்லி கடவுச் சீட்டு தரப்படுத்தல் அவதானிப்பாளர்கள் (Henley Passport Index Monitors) 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் கடவுச் சீட்டுகளின் தர வரிசையை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகின்றனர். இந்த தரப்படுத்தலை சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் (International Air Transport Association) வழங்கும் தரவுகளை வைத்தே மதிப்பீடு செய்து வெளியிட்டு வருகின்றனர்.

2022 ஆம் ஆண்டுக்கான கடவுச் சீட்டு தரப்படுத்தல் வரிசையில் 199 நாடுகளின் பட்டியல் அடங்கியுள்ளது. இவை 2021 ஆம் ஆண்டின் அடிப்படையிலேயே வெளியிடப்பட்டுள்ளன. இந்தத் தரப்படுத்தலில் வழமைபோல யப்பானும் சிங்கப்பூரும் முன்னணியில் இருக்கின்றன. இந்த நாடுகளின் கடவுச் சீட்டுகளை வைத்திருப்பவர்கள் உலகிலுள்ள 192 நாடுகளுக்கு நுழைவு அனுமதிப் பத்திரம் (Visa) இன்றி பயணிக்க முடியும்.

இந்தத் தரப்படுத்தல் போட்டியில் புதிதாக மூன்று நாடுகள் – எஸ்தோனியா, லற்வியா, சிலோவேனியா (Estonia, Latvia and Slovenia) – என்பவை நுழைந்துள்ளன. மேற்கு நாடுகளான கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா என்பன கடவுச் சீட்டு தர வரிசையில் முன்னேறிச் சென்று பலமான நிலையில் உள்ளன.

சீனா தர வரிசையில் 68 ஆவது நிலையில் இருந்து 64 ஆவது நிலைக்கு முன்னேறியுள்ளது.

இந்த கடவுச் சீட்டுத் தரப்படுத்தல் வளர்ந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையில் சுதந்திரமான பிரயாணம் சம்பந்தமான பெரும் இடைவெளியையும் எடுத்துக் காட்டியுள்ளது. அதாவது தரப்படுத்தல் வரிசையில் யெமன், பாகிஸ்தான், சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் (Yemen, Pakistan, Syria, Iraq and Afghanistan) போன்ற நாடுகள் கடைசி நிலையில் இருக்கின்றன.

இலங்கை கடவுச் சீட்டு 102 ஆவது நிலையிலும், வட கொரிய கடவுச் சீட்டு 104 ஆவது நிலையிலும் இருக்கின்றன.

# கியூபப் புரட்சியின் 63வது ஆண்டு தினம்

**கி**யூபாவில் ஜனவரி 1 ஆம் திகதி விடுதலை தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த வருடம் கியூபாவின் சரித்திர நாயகன் ஃபிடல் கஸ்ட்ரோவின் தலைமையில் அங்கு புரட்சி அரசாங்கம் அமைக்கப்பட்ட 63 ஆவது ஆண்டு தினத்தைக் குறிக்கிறது. அதற்கு முன்னர் இராணுவ ஆட்சியாளர் பட்டிஸ்ட்டா (Fulgencio Batista) 1958 டிசம்பர் 31 இல் நாட்டை விட்டுத் தப்பியோடினார்.

கியூபாவின் விடுதலைப் போராட்ட வரலாற்றைப் படித்தால், சுதந்திரத்தை நேசிக்கும் எல்லா மக்களுக்கும் உணர்வு மேலிடும். கியூபாவின் முதலாவது சுதந்திரப் போராட்டம் கார்லோஸ் மனுயேல் செஸ்பெடெஸ் (Carlos Manuel Cespedes) என்பவர் தலைமையில் நடைபெற்றது. நிலவுடமையாளரான அவர், தானே முன்வந்து அடிமைகளை விடுதலை செய்து அவர்களை ஸ்பானிய (Spanish) காலனியாதிக்கவாதிகளுக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுத்தினார். இது 10 வருடங்களாக நடைபெற்றது (1868 – 1878). இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தின் சிற்பி ஜோஸ் மார்ட்டி (Jose Marti) ஆவார் (1895 – 1898). ஜோஸ் மார்ட்டி ஒரு போரின் போது கொல்லப்பட, முதலாவது சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றிய சிரேஸ்ட போராளிகளான மக்சிமோ கோமெஸ் (Maximo Gomez) மற்றும் அன்ரோனியோ மசியோ (Antonio Maceo) ஆகியோரால் சுதந்திரப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. 1898 இல் கியூபாவில் இருந்து ஸ்பானிய காலினித்துவவாதிகள் வெளியேறும் வகையில் ஒரு உடன்படிக்கை பாரீசில் வைத்து அமெரிக்காவுக்கும் ஸ்பொயினுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், 1901 இல் செய்யப்பட்ட பிளாட் திருத்தம் (Platt Amendment), அமெரிக்கா கியூபாவின் அரசியல், நிர்வாக மற்றும் இராணுவத்துறைகளில் தலையிடுவதற்கான அதிகாரத்தை வழங்கியது.

புரட்சிக்கு முந்தைய கியூபா அதன் பிரசித்தமான கடற்கரைகள், கரும்புத் தோட்டங்கள், சூதாட்டங்கள், விபச்சாரம், சுற்றுலாத்துறை என்பனவற்றுக்கு பிரபல்யமாக இருந்தது. கியூபா அதிக சனத்தொகையைக் கொண்டிருந்ததால்




வேலையின்மையும் வறுமையும் தாண்டவமாடின. இளம் வயது ஃபிடல் மாணவர் மற்றும் இளைஞர் அரசியலில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டார். அவர் சமூக சமத்துவத்துக்காக பலமாகக் குரல் எழுப்பியதன் மூலம் பிரபல்யம் அடைந்திருந்த ஈடுவார்டோ சிபாஸ் (Eduardo Chibas) அவர்களுடனும், அவரது பழமைவாத கட்சியுடனும் (Orthodox Party) இணைந்திருந்தார்.

**கியூபாவின் நண்பர்கள் – இலங்கை (Friends of Cuba – Sri Lanka)**

1952 மார்ச் 10 இல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த தேர்தல் இராணுவ ஆட்சியாளர் பட்டிஸ்ட்டாவினல் இரத்துச் செய்யப்பட்டது. கியூபாவின் அரசியல் சூழல் அமெரிக்க ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த கியூபாவின் அரசியலை மாற்றுவதற்கான ஒரு புதிய இயக்கத்தின் தேவையை வேண்டி நின்றது. கியூப சுதந்திரத்தின் சிற்பியான ஜோஸ் மார்ட்டியின் சுதந்திரம் மற்றும் தன்மான உணர்வுகளின் அடிப்படையில் மக்களுக்கு உணர்வூட்டி அவர்களை அமைப்பு ரீதியாகத் திரட்ட வேண்டிய தேவையை ஃபிடல் உணர்ந்து கொண்டார்.

1953 யூலையில் ஃபிடலும் அவரது சகோதரர் ராவுலும் (Raul) சுமார் 160 இளைஞர்களைத் திரட்டி மொன்காடா இராணுவப் (Moncada Garrison) பாசறையைத் தாக்குவது எனத் தீர்மானித்தனர். இந்தத் தாக்குதல் பட்டிஸ்ட்டாவின் ஊழல்கார ஆட்சியின் மீது வெறுப்புற்றிருந்த கியூப மக்களின் கண்களைத் திறக்க வைத்தது. மொன்காடா தாக்குதல் தோல்வியடைந்ததுடன், அதன் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். பின்னர் பொது மக்களின் அழுத்தம் காரணமாக இராணுவ ஆட்சியாளர் பட்டிஸ்ட்டா, கைதிகளுக்கு மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்தார். அதன் பின்னர் ஃபிடலும், ராவுலும் மெக்சிக்கோவுக்குச் சென்றதுடன், அங்கு 'யூலை 26 இயக்கம்' (July 26th Movement) என்ற பெயரில் ஃபிடல் கிளர்ச்சி இராணுவம் ஒன்றையும் உருவாக்கினர். ஆர்ஜன்ரீனிய (Argentina) மருத்துவரான ஏர்னெஸ்ட்ரோ சே குவேரா (Ernesto Che Guevara) கியூப கிளர்ச்சியாளர்களால் கவரப்பட்டு அவரும் கிளர்ச்சி இராணுவத்தில் இணைந்து கொண்டார். அவர்கள் 1956 இல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 'கிரான்மா' (Granma) என்ற படகின் மூலம் கியூபாவுக்குச் சென்றனர். பட்டிஸ்ட்டா கிரான்மாவின் வருகையை

அறிந்து கொண்டார். கிரான்மா தாக்கப்பட்டு அதில் பயணம் செய்த 80 பேரில் 12 பேர் மட்டும உயிர் தப்பினர். அவர்கள் சீரா மாஸ்ட்ரா மலைகளில் (Sierra Maestra Mountains) மீண்டும் ஒன்றிணைந்தனர். ஃபிடல் கஸ்ட்ரோ தலைமையில் கியூப மக்களின் இலட்சியத்துக்காக நடத்தப்பட்ட நியாயமான போராட்டம் காரணமாக அமெரிக்க பொம்மை சர்வாதிகாரி பட்டிஸ்ட்டா 1958 டிசம்பர் 31 ஆம் திகதி நாட்டை விட்டுத் தப்பியோடினான்.

வெற்றிகரமான கிளர்ச்சிப் படை 1959 ஜனவரி 1 ஆம் திகதி இரண்டாவது பெரிய நகரமான சந்தியாகோ டி கியூபாவுக்குள் (Santiago de Cuba) பிரவேசித்தது. ஜனவரி 2 ஆம் திகதி ஒரு பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இராணுவ ஆட்சி கவிழ்ந்தது. 1959 ஜனவரி 8 ஆம் திகதி ஃபிடல் நாடு தழுவிய வெற்றி நடை போட்டு தலைநகர் ஹவானாவுக்குள் பிரவேசித்தார். ஃபிடல் புரட்சிகர ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதியாகப் பதவி ஏற்றுக் கொண்டார். புரட்சிகர அரசாங்கம் முன்னெடுத்த மாற்றங்கள் நினைத்துப் பார்க்க முடியாதவையாக இருந்தன. குறுகிய காலத்துக்குள் கல்வியறிவின்மையை ஒழித்தமை, இலவச மருத்துவ வசதி, இலவச வீட்டு வசதி, இலவசக் கல்வி, உறுதியான சமூக நலத் திட்டம் என்பன கியூபப் புரட்சி ஈட்டிய வெற்றிக்கு பலமிக்க சாட்சியங்களாக இருந்தன.

கியூபப் புரட்சியும், புரட்சிகர அரசாங்கம் எடுத்த சீர்திருத்த நடவடிக்கைகளும் அமெரிக்காவுக்குப் பிடிக்காதவையாக இருந்தன. கியூபப் புரட்சியின் ஆரம்ப நாட்களில் அமெரிக்க ஜனாதிபதி ஐஸ்னனோவர் (Eisenhower) கியூபாவுக்கு எதிரான ஒரு சீ.ஐ.ஏ. (C.I.A.) நடவடிக்கைக்கு அங்கீகாரம் அளித்தார். 1959 டிசம்பரில் பூகோள மேற்குப் பகுதி (Western Hemisphere) சீ.ஐ.ஏ. தலைவரான கேர்ணல் ஜே.சி.கிங் (J.C.King) ஃபிடலை ஒழித்துக் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிய ஒரு அறிக்கையை சீ.ஐ.ஏ. தலைவரான அலென் டலசுக்கு (Allen Dulles) அனுப்பினார். அதன் பின்னர் ஃபிடலை கொலை செய்வதற்கான சுமார் 600 முயற்சிகள் அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சீ.ஐ.ஏ. தொடர்ந்து நாடு கடந்து வாழும் கியூபர்களுக்குப் பயிற்சி அளித்து கியூபாவுக்கு எதிராக பல கூலிப்படைத் தாக்குதல்களை நடத்தி வந்துள்ளது.

புரட்சிகர அரசாங்கம் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், சீனித் தொழிற்சாலைகள், தொலைபேசி நிறுவனங்கள் போன்ற அமெரிக்க வர்த்தகங்களை உழைக்கும் மக்களின் வேண்டுகோளின் பேரில் தேசியமயமாக்கியது. 1959 ஓகஸ்ட் 28 ஆம் திகதியன்று அமெரிக்கா கியூபா மீது வர்த்தகத் தடை விதித்தது. லெஸ்ரர் மல்லோறி (Lester Mallory) என்பவர் 1960 இல் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் அதிகாரமிக்கவராக இருந்தார். அவர் தனது கருத்துகளைப் பதிவு செய்கையில் கியூபப் புரட்சி கியூப மக்களின் பரந்த ஆதரவைப் பெற்றிருப்பதால் அடிப்படையில் உள்நாட்டில் அரசுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லையென்றும், கியூபப் புரட்சியை முறியடிப்பதாக இருந்தால், பொருளாதாரத் தடைகளை விதித்து, மக்களைப் பட்டினிக்குள் தள்ளி அவர்களைச் சரணடைய வைப்பதன் மூலமே அமெரிக்கா அதைச் சாதிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் கியூபப் புரட்சிக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த 12 ஜனாதிபதிகள் கியூபப் புரட்சிக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை இறுக்கி வந்துள்ளனர். கடைசி நான்கு ஆண்டுகளாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் (Donald Trump) கியூபாவுக்கு எதிரான தடையின் நிமித்தம் 235 புதிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார். இந்தத் தடைகள் கியூப வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் பாதித்து வந்துள்ளன. அதாவது, கல்வியிலிருந்து பொது சுகாதாரம், விவசாயம், வர்த்தகம் வரை. இது கியூபாவில் வாழ்கின்ற அமெரிக்க பிரசைகளின் குடும்பங்களுக்கும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக நிதி நிறுவனங்கள் எவையும் கியூபாவுடன் தொடர்புகளை வைப்பதில்லை.

கியூபப் புரட்சி பனிப்போர் (Cold War) உச்சக் கட்டத்தில் இருந்தபோது நிகழ்ந்தது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் கருத்தியல் ரீதியாக பனிப்போர் முடிவுக்கு வந்தது. கியூபா மீதான பொருளாதாரத் தடை அர்த்தமற்றது. ஐ.நா. முகவரகங்கள் (UN Agencies) வகுத்ததிற்கிணங்க சுகாதாரப் பராமரிப்பு, சுற்றுச்சூழல், கல்வி என்பனவற்றில் கியூப மக்களின் சாதனைகள் அதன் இலக்குகளை எட்டிப் பிடித்துள்ளன. கொவிட் – 19 பெருந்தொற்றின் போது கியூபாவின் ஹென்றி றீவெஸ் வைத்திய அணி (Henry Reeves Medical Brigade) 40 நாடுகளில் வைத்திய சேவை புரிந்துள்ளது. அதற்கும் மேலாக கியூபா தயாரித்துள்ள ஐந்து வகைத் தடுப்பூசிகளில் மூன்றை அவசர தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் என உலக சுகாதார அமைப்பு (World Health Organisation) அங்கீகரித்துள்ளது.

தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் (Joe Biden) தமது பனிப்போர் மன நிலையிலிருந்து விடுபட்டு, கியூபாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும்.

**கியூபா வாழ்க!**

(கியூபாவின் நண்பர்கள் – இலங்கை என்ற அமைப்பினால் வெளியிடப்பட்ட இக்கட்டுரை கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றில் வெளிவந்ததாகும்)

## வட மாகாண ஆளுநரின் எச்சரிக்கை!

**இலங்கையின்** வட மாகாணத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நிகழ்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத அரச ஊழியர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா எச்சரிக்கை விடுத்திருக்கிறார். இந்த நடவடிக்கை சுற்றுச் சூழல் திட்ட நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட அரச ஊழியர்கள், செயலாளர்கள் மற்றும் முக்கியமான பொலிஸ் அதிகாரிகள் மீது எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், வட மாகாணத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் வழமையான சட்டங்களின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே இங்குள்ள பொலிசாரும், பிரதேச சபைகளும் இதை ஒரு விசேட கடமையாகக் கருதி உதவ முன்வர வேண்டும் என்றார்.

மேலும் அவர், காரைநகர் பகுதியில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக சிறப்பான முறையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள மிக உயர் தரத்திலான வடிகால் அமைப்புகள், நெடுஞ்சாலைகள் என்பன இப்பொழுது செயலற்றுக் கிடக்கின்றன என்று கூறியுள்ளார்.

வட மாகாணத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சிறப்பு நடவடிக்கைத் திட்டங்கள் குறித்து தமக்கு ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஆளுநர் பணித்துள்ளார்.

# தென்னாசிய நாடுகளின் வளர்ச்சிக்கு சீனாவின் உதவி தேவை

தென்னாசியாவின் வளர்ச்சி முன்னேற்றத்துக்கு சீனாவின் உதவிகள் தேவைப்படுகின்றன. ஏனெனில், சீனாவைப் பொறுத்தவரை "வளர்ச்சி" என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. சீனாவின் பேராவல் நிறைந்த "தடம் மற்றும் பாதை" (Belt and Road) திட்டத்தால் பெரும்பாலும் எல்லா தென்னாசிய நாடுகளும் பயன் பெற இருக்கின்றன. நேபாளம், பங்களாதேஸ், சிறீலங்கா, பாகிஸ்தான் என்பன இந்தத் திட்டத்தால் நேரடியாக நன்மை பெற இருக்கின்றன.

சீனா பெரும்பாலான தென்னாசிய நாடுகளுக்கு தனது கொவிட் – 19 இராஜதந்திரத்தின் ஊடாக உதவுகின்றது. தென்னாசிய நாடுகள் எப்பொழுதும் தமது நெருக்கடியான தருணங்களில் சீனாவின் உதவியைப் பெற்று வந்திருக்கின்றன. சீனாவின் தடுப்பூசி இராஜதந்திரம் யதார்த்தத்தை விளங்கிக் கொள்வதற்கு ஒரு உதாரணமாகும். சீனா தென்னாசியாவிலுள்ள பங்களாதேஸ், நேபாளம், சிறீலங்கா, பாகிஸ்தான், மாலைதீவுகள் போன்ற நாடுகளுக்கு கொவிட் – 19 தடுப்பூசிகளையும், மருத்துவ உபகரணங்களையும் வழங்கி உதவியுள்ளது. சீனா தென்னாசியாவின் ஒரு நண்பரும், நலன் விரும்பியும் என்பதை ஏற்கெனவே நிரூபித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் சீனா தொடர்புடைய திட்டம் இந்தப் பயணத்தில் ஒன்றாகும். ஆப்கானிஸ்தானில் எல்லா விடயங்களும் சரியாகிவிட்டால், பின்னர் பல சீன முதலீடுகள் ஆப்கானிஸ்தானுக்கு செல்வச் செழிப்பைக் கொண்டு வந்துவிடும். ஆப்கானிஸ்தான் தன்னை சீன – பாகிஸ்தான் பொருளாதார வழியுடன் (China – Pakistan Economic Corridor) இணைத்துக் கொண்டால், அது சீனாவின் திட்டத்திலிருந்து நேரடியாக நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும். பாகிஸ்தான் தினசரி பத்திரிகையான "பாகிஸ்தான் ஒப்சேவர்" (Pakistan Observer) 2021 செப்ரெம்பர் 15 இல் வெளியிட்ட "ஆப்கானிஸ்தானுக்கு சீன – பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் எப்படி?" என்ற தலைப்பிலான கட்டுரையின்படி, ஆப்பானிஸ்தான் நிச்சயமாக சீனாவை அணுகி அதிக பட்சமான வர்த்தக நன்மைகளைப் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளும்




என்பது தெளிவாகிறது. யுத்தத்தால் சிதைந்து போயுள்ள ஆப்கானிஸ்தானின் சமூக – பொருளாதார – உள்கட்டுமான வளர்ச்சிக்கு சீனா தனது பங்களிப்பை வழங்கும். செப்ரெம்பர் நடுப்பகுதியில் சீனாவின் ஜியாங்ஸி கொப்பர் (Jiangxi Copper) கொம்பனி தெரிவிக்கையில், நிலைமைகள் அனுமதித்தால், தமது கொம்பனியும் சீனாவின் கனிம கூட்டுத்தாபனமும் (Metallurgical Corp. of China) இணைந்து ஆப்கானிஸ்தானின் மெஸ் அய்னாக் (Mes Aynak) சுரங்கத்தை அபிவிருத்தி செய்வோம் எனக் கூறியிருக்கிறது.

*பதிக் ஹசன்* **(Pathik Hasan)**

**எல்லா சூழலுக்குமான நண்பர்கள் (All Weather Friends)**

பாகிஸ்தான் சீனாவின் பல கோடி முதலீட்டுத் திட்டமான சீன – பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தின் மூலம் பிரதான நன்மை பெறும் நாடாக இருக்கின்றது. சீனா பாகிஸ்தானில் கட்டி வரும் துறைமுகம் தென்னாசியா, மத்திய ஆசியா, மத்திய கிழக்கு என்பனவற்றுக்கிடையே ஒரு பிராந்திய வர்த்தகக் கேந்திரமாக இருக்கப் போகின்றது. பாகிஸ்தானின் எல்லாச் சூழலுக்குமான நண்பர் பாகிஸ்தானுக்காக எதையும் செய்யத் தயார் என்பது உண்மையே. பாகிஸ்தானும் சீனாவுக்கு நன்றியுடையதாக இருக்கின்றது. பாகிஸ்தானும் சீனாவும் எல்லாச் சூழலுக்குமான உண்மையான நண்பர்கள் என்பதை நிரூபித்துள்ளன.

சிறீலங்காவைப் பொறுத்தவரை, 'சீனக் கடன் பொறிக்குள் வீழ்ந்துள்ளது' என்ற சொல்லைக் கேட்கின்றோம். அடிப்படையில் இதுவொரு பகுதியான வார்த்தை (Partial term). சிறீலங்கா சீனாவின் திட்டங்களால் நன்மையடைந்துள்ளது. ஆனால் பலர் சீனக் கடன்பொறி பற்றிப் பேசுகிறார்களேயொழிய சிறீலங்காவில் சீனாவின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்துப் பேசுவதில்லை. சீனா ஏற்கெனவே சிறீலங்காவில் பல கோடி ரூபாய்களை டொலரில் முதலீடு செய்துள்ளது. அவர்கள் சிறீலங்காவில் துறைமுகங்கள், விமான நிலையங்கள், துறைமுக நகரங்கள், தேசிய நெடுஞ்சாலைகள், மின் விநியோக நிலையங்கள் என்பனவற்றில் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளனர். இந்த சீன முதலீடுகளால் இலங்கை நன்மை பெற்றுள்ளதா இல்லையா என்பதே கேள்வி. சொல்லப்போனால், சிறீலங்கா

இந்த சீன முதலீடுகளால் நன்மையே பெற்றுள்ளது.

வழி மற்றும் தடம் திட்டமாகிய அம்பாந்தோட்டை துறைமுகம் (Hambantota Port) சரியான முறையில் பயன்படுத்தப்படுமாக இருந்தால், அதன் மூலம் சிறீலங்கா அதிக நன்மை பெறும். சீன – பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் முழுமையாக செயல்படுமாக இருந்தால், அதன் மூலம் இலங்கை கடல்வழி வர்த்தகக் கேந்திரமாகி நன்மை பெறும். அம்பாந்தோட்டை துறைமுகமும், கவடார் (Gwadar Port – Pakistan) துறைமுகமும் மத்திய கிழக்கு, மேற்காசியா, யூரேசியா, தென்னாசியா, தென் கிழக்காசியா, கிழக்காசியா என்பனவற்றை இணைக்கும். சிறீலங்கா கடல்வழி கேந்திரமாக மாறி, பல நாடுகள் அதைப் பயன்படுத்துவதன் மூலம் சிறீலங்கா மக்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதப்படுத்தப்படும். இந்தப் பிராந்தியங்களுக்கான பொருளாதார வளர்ச்சியில் முன்பு இருந்த பாரபட்சம் குறையும். சீனத் திட்டங்கள் பெரும்பாலும் தென்னிலங்கையிலேயே நடைபெறுகின்றன. கோத்தபாய ராஜபக்ச அரசாங்கம் இப்பொழுது நாட்டின் வடக்கிலும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகளில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்யும் முயற்சிகளுக்கு சீனாவுக்கு அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் எழுந்தன. எப்படியிருந்த போதிலும், சீனா இலங்கையின் சமூக – பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது.

**சீன முதலீடுகள்**

பங்களாதேஸ் சீனாவிடமிருந்து நன்மை பெறுகிறது. தென்னாசியாவில் பங்களாதேஸ் சீனாவின் பிரதான வர்த்தகக் கூட்டாளிகளில் ஒன்றாகும். பங்களாதேசின் மிகப்பெரிய திட்டங்களான பத்மா பாலம் (Padma Bridge), பவ்ரா மின் நிலையம் (Pavra Power Plant), காமபுலி நதிக்குக் கீழான வங்கபந்து சுரங்கப் பாதை (Bangabandhu Tunnel under the Kamaphuli River) போன்றவை சீன முதலீட்டின் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்பட்டன. சீனா பங்களாதேசின் ஒரு மூலோபாய பங்காளியாகக் கணிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஸ் 2017 இல் சீனாவின் தடம் மற்றும் வழியில் இணைந்து கொண்டது. இரண்டு நாடுகளும் தடம் மற்றும் வழி கூட்டுறவில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. பங்களாதேசின் 97 வீதமான உற்பத்திப் பொருட்கள் சீனாவில் தீர்வையற்ற நிலையை (Tax Free) அனுபவித்து வருகின்றன.

சீனா தென்னாசியாவின் சமூக – பொருளாதார நிலைமைகளை அபிவிருத்தி செய்யும் மாபெரும் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. சீனா நேபாளத்தையும் பாகிஸ்தானையும் தென்னாசியா, மத்திய ஆசியா, மேற்காசியா என்பனவற்றுக்கும், ஒரு குறிப்பிட்டளவு மத்திய கிழக்கிற்கும் ஆன நுழைவாயிலாகத் தேர்ந்தெடுத்துள்ளது. எனவே, சீனா நேபாளத்தை தனது கைகளில் வைத்துக்கொண்டு பல்வேறு திட்டங்களுடன் முன்னேறி வருகிறது. அதன் காரணமாக சீனா 2017 இல் பல மில்லியன் டொலர்களை நேபாளத்தில் முதலீடு செய்துள்ளது. இது தவிர, வீதிகள், புகையிரதம், தொலைபேசி இணைப்புகள் என நேபாளத்தின் உள்கட்டமைப்புக்காக சீனா நேபாளத்தில் மேலதிகமாக 10 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது. 2019 ஒக்ரோபரில் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் (Xi Jinping) நேபாளத்துக்கு வெற்றிகரமான பயணம் ஒன்றை மேற்கொண்டார். அப்பொழுது இரு நாட்டு ஜனாதிபதிகளும் இணைந்து சீன – நோபாள உறவுகள் "அபிவிருத்திக்கும் நட்புறவுக்குமான முடிவடையாத கூட்டுறவின் மூலோபாய பங்குடைமையாளர்கள்" என அறிவித்தனர்.

சீன ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பு, கைத்தொழில்கள், நெடுஞ்சாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், விளையாட்டு அரங்குகள், தொலைபேசி வசதிகள் என்பவை மிகவும் பயனுள்ளவை என நேபாள அரசாங்கமும் மக்களும் மெச்சுகின்றனர். விரைவில் பூர்த்தி செய்யப்படவுள்ள லாசா (Lhasa) – சிகாஸ்ற் (Shigatse) இலிருந்து கெருங் (Kerung) வரையான புகையிரதப் பாதை நோபாளத்தின் வர்த்தகம், சுற்றுலாத்துறை என்பவற்றிலும், சீனாவின் மக்களுடனான தொடர்பிலும் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்கார்க்கப்படுகிறது.

சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் 1950 களில் ஆரம்பிக்கப்பட்ட இராஜதந்திர உறவுகள் மிகவும் பழமையானவை. பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் சமீபத்தில் ஏற்பட்ட மனக்கசப்புகள் பழைய உறவுகளில் தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. சீன – பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்துக்காக சீனா பாகிஸ்தானில் 46 பில்லியன் டொலர்கள் முதலீடு செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2015 இல் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் பாகிஜ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட போது இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது. இது சீனாவின் ஒரு தடம் – ஒரு பாதை திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

மேற் குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில், தென்னாசியாவின் வளர்ச்சிக்கு சீனா ஒரு வளர்ச்சிப் பங்காளியாக இருப்பது அவசியம் என்ற முடிவுக்கு வரலாம். சீன - இந்திய பிணக்கு இராஜதந்திர வழிகளில் தீர்க்கப்பட்டால், சீனாவின் முயற்சிகள் இந்தியா, பூட்டான் உட்பட அனைத்து தென்னாசிய நாடுகளுக்கும் பயனுள்ளதாக அமையும். சீனா தனக்கானது மட்டுமல்ல, தென்னாசியா உட்பட முழு உலகத்துக்குமானது.

(மேலே தரப்பட்டுள்ளது யூரேசிய றிவியூ (Eurasia Review) இதழில் பதிக் ஹஸன் என்பவர் எழுதிய ஒரு கட்டுரையின் முக்கியமான பகுதிகளாகும்)

---

"கீழ்நோக்கி உங்கள் பாதத்தைப் பார்க்காதீர்கள். மேல்நோக்கி நட்சத்திரங்களைப் பாருங்கள்"

"எப்படியாயினும் கடினமான வாழ்க்கை உருவாகலாம். அங்கு எப்போதும் உங்களால் செயல்பட மற்றும் வெற்றிபெற முடிந்த ஏதாவது இருக்கும் "

"இந்த பிரபஞ்சத்தை விட பெரியது அல்லது பழமையானது எதுவுமில்லை"

"நமது பேராசை மற்றும் மூடத்தனத்தின் மூலம் நாம் நம்மை அழித்துக்கொள்ளும் அபாயத்தில் இருக்கிறோம் "

"நீங்கள் எப்போதும் கோபமாகவோ அல்லது குறை கூறிக்கொண்டோ இருந்தால், மற்றவர்கள் உங்களிடம் நேரம் செலவழிக்க மாட்டார்கள்"

**–ஸ்டீபன் ஹாக்கிங் (stephan Hawking)**

# என்றைக்கும் அணையா ‘ஜோதி’ பாசு



***1943*** ஆம் ஆண்டு வங்காளம் மிகக் கொடிய பஞ்சத்தை கண்டது. பல இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி நாடு முழுவதும் நிதி திரட்டி மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியது. நூற்றுக்கணக்கான கஞ்சித் தொட்டிகளை தொடங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியது. இச்சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சியினால் மருத்துவ உதவி குழு உருவாக்கப்பட்டது. இதற்கு டாக்டர் பி.சி. ராய் தலைவராகவும் ஜோதிபாசு செயலாளராகவும் இருந்தார். *1944* ஆம் ஆண்டில் கட்சி ஜோதிபாசுவை பி.என் (B.N)-ரயில்வே தொழிலாளர் மத்தியில் வேலை செய்து தொழிற்சங்கத்தை உருவாக்கும்படி கூறியது. ஜோதிபாசு இந்த ரயில்வே தொழிலாளர் சங்கத்தை உருவாக்குவதற்காக மிகக் கடுமையாகப் பாடுபட்டார். அவர் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுடன் மிக நெருக்கமாக பழகினார். ஓராண்டு காலத்திற்குள் பி.என் தொழிலாளர் சங்கத்திற்கு ஒரு பலமான அடித்தளம் இட்டார். *1945* ஆம் ஆண்டில் ஜோதிபாசு கட்சியின் மாநிலக்குழுவில் இணைக்கப்பட்டு அதன் அமைப்பாளர்களில் ஒருவரானார்.

*1946* ஆம் ஆண்டில் மாகாண சட்டமன்ற தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி *20* சட்டமன்ற தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியது. ஜோதிபாசு ரயில்வே தொழிலாளர்கள் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்திய நாட்டின் வரலாற்றில் முதன்முறை யாக கம்யூனிஸ்டுகள் எட்டு சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி பெற்றனர். இத்தேர்தலில் அன்றைய காங்கிரஸ் கட்சி ரவுடித்தனத்தை கட்டவிழ்த்துவிட்டது. பல இடங்களில் கம்யூனிஸ்ட்டுகள் கடுமையாக அடக்கப் பட்டனர். அந்த விஷயத்தை ஜோதிபாசு நினைவுபடுத்துகிறார் “ஒரு வேட்பாளர் என்ற முறையில் என்னுடைய முதல் தேர்தலானது ஒரு முதலாளித்துவ தேர்தல் என்பது எப்படி இருக்கும் என்பதை உணர்த்தியது. அது நெருப்பில் எழுந்த ஞானஸ்தானம் ஆக இருந்தது. இந்த தேர்தலானது ஒரு படிப்பினையாக இருந்தது. நம்முடைய வர்க்க எதிரிகள் பகிரங்கமாக அல்லது மறைமுகமாக எந்த வழியையும் கடைபிடிப்பார்கள்” என்பதை நாங்கள் உணர்ந்தோம். *1946*ஆம் ஆண்டு தேர்தலானது எனக்கு ஒரு விஷயத்தை போதித்தது. அதாவது இந்த “முதலாளித்துவ அமைப்பில் இலட்சியத்திற்கும் நேர்மைக்கும் இடம் கிடையாது என்பதே அது. அதன் நோக்கம் முழுவதும் எவ்வாறா யினும் வெற்றி பெறுவதே என்பதை அது எனக்கு உணர்த்தியது” ஜோதிபாசுவின் முதல் தேர்தல் பார்வையானது இன்றைக்கும் ஒன்றிய அரசாங்கத் திற்கும் மேற்கு வங்கத்தில் ஆளுகின்ற திரிணாமுல் காங்கிரசுக்கும் பொருந்தக் கூடியதாகவே உள்ளது.

*ந. ராஜா*

*1946* ஆம் ஆண்டில் பயங்கரமான மதக்கலவரம் மூண்டது. இதில் *20* ஆயிரம் பேர் பலியாகினர். இதுகுறித்து ஜோதிபாசு கூறுகையில், நமது கட்சி நாட்டின் பிரிவினையை தீவிரமாக எதிர்த்தது. நமது செல்வாக்கு ஒரு அளவிற்கு மட்டுமே இருந்த போதிலும் அதைக்கொண்டு தீவிரமாக எதிர்த்தது. இந்து–முஸ்லிம் ஒற்றுமை வேண்டும் என்பதில் அது உறுதியாக இருந்தது.

## போராடும் மக்களுக்கு ஆதரவாக

*1952* முதல் *1962* வரையிலான காலத்தில் ஏராளமான தொழிலாளர்கள், விவசாயிகள் ,அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் போராட்ட வீச்சுகளை கண்டது. அனைத்துப் போராட்டங்களிலும் போராடும் மக்களுக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டுவதில் ஜோதிபாசு முக்கிய பங்கு வகித்தார். *1960*–களில் நாடெங்கும் தலைவிரித்தாடிய அரிசிப் பஞ்சம் வங்கத்தையும் விட்டு வைக்கவில்லை. அங்கு இடது முன்னணி வீதிகளில் இறங்கிப் போராடியது. தோழர் ஜோதிபாசு உட்பட பல தலைவர்களும் பல்லாயிரம் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். *1969* இல் ஐக்கிய முன்னணி பெருவெற்றி பெற்றது. அஜய் முகர்ஜி முதல்வராகவும் ஜோதிபாசு துணை முதல்வராகவும் பொறுப்பேற்றனர். *1971* இல் ஜோதிபாசுவுக்கு ஆட்சியமைக்க பெரும்பான்மை இருந்தும் ஆளுநர் ஆட்சி அமைக்க அழைக்க மறுத்தார். *1972*இல் நடைபெற்ற தேர்தலில் கடுமையான அடக்கு முறை மற்றும் மோசடியான தேர்தலை நடத்தியது காங்கிரஸ். இதனால் கடைசி நேரத்தில் தேர்தலில் இருந்து விலகுவதாக ஜோதிபாசு அறிவித்தார். *1972* முதல் *1977* வரை *1500* மார்க்சிஸ்ட் கட்சி தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரம் தொண்டர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக வெளிமாநிலங்களுக்கு விரட்டப்பட்டனர். அரை பாசிச ஆட்சி நடந்தது. இதை எதிர்த்த போராட்டத்தில் புடம் போட்டு வார்க்கப்பட்டதுதான் இடது முன்னணி. *1977*இல் உலகமே வியக்கும் வண்ணம் அடக்குமுறை களை முறியடித்து இடது முன்னணி பெற்றது சாதாரண வெற்றியல்ல. மூன்றில் இரண்டு பங்கு இடங்களை வென்றது.

## நிலச்சீர்திருத்த சாதனை

*1946* முதல் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற ஜோதிபாசு *24* ஆண்டுகள் ஒப்பாரும்

மிக்காரும் இல்லாமல் முதல்வராய் ஜொலித்தார். தம் ஆட்சிக்காலத்திலேயே புத்ததேவ் பட்டாச் சார்யாவை முதல்வராக்கி தான் சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து, வேறு எங்கும் நிகழாத அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினார். இந்தியாவின் ஜீவன் கிராமங்கள், இந்தியாவின் ஆத்மா கிராமங்கள், இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள் என்று விடுதலைப் போரில் மகாத்மா காந்தியும் ஜவஹர்லால் நேருவும் கூறியதை பேசாத கட்சிகளே இல்லை தலைவர்கள் இல்லை. ஆனால் கிராமப்புறங்களை தலைநிமிர வைத்தது தான் மேற்கு வங்கத்தின் தலையாய சாதனை. கிராமப்புற வளர்ச்சி, நிலச்சீர்திருத்தம் 1977 முதல் இடது முன்னணியின் முதன்மை இலக்காக இருந்தது.

நிலச்சீர்திருத்தம், உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் என்கிற இரண்டும் கிராமப்புற வளர்ச்சி என்கிற கோபுரத்தின் அடித்தளம் எனில் மிகையல்ல. 73.66 இலட்சம் ஹெக்டேர். இதில் 18 விழுக்காடு அதாவது 13.81 இலட்சம் ஹெக்டேர் நிலம் மேற்குவங்கத்தில் மட்டும் கையகப்படுத்தப் பட்டது. இதில் 10.63 இலட்சம் ஹெக்டேர் நிலம் ஏழை விவசாயிகளுக்கு தரப்பட்டது. 26 இலட்சத்து 46 ஆயிரம் குடும்பங்கள் பயன் அடைந்தனர். இதில் 9.72 இலட்சம் பேர் தலித்துகள். 5.11 இலட்சம் பேர் பழங்குடியினர் என்பது ஜோதிபாசு ஆட்சிக் காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஒரு பெரும் சாதனையாகும். உணவு உற்பத்தி வளர்ச்சி விகிதம் சீராக 6 விழுக்காடு வளர்ச்சியை கண்டு வந்தது. ஜோதிபாசு காலத்தில் இந்தியாவில் அதிக மக்கள்தொகை கொண்ட 17 பெரிய மாநிலங்களில் மேற்கு வங்கம் உணவு உற்பத்தியில் முதலிடம் வகித்தது. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம் இட ஒதுக்கீடு பற்றிய பரிந்துரை செய்த மண்டல் கமிஷன் தனது அறிக்கையில் மேற்குவங்க நிலச் சீர்திருத்தத்தை சுட்டிக்காட்டி பாராட்டியதோடு, அதுவே சரியான அணுகுமுறை எனவும் கோடிட்டுக் காட்டியது.
நிலச்சீர்திருத்தம், பெண்களுக்கு அதிகாரம் வழங்குவதிலும் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்தது. மேற்கு வங்கத்தில் 5.55 இலட்சம் பெண்களுக்கு தனி பட்டா வழங்கியது. கணவன், மனைவி பெயரில் கூட்டுப்பட்டா வழங்கியும் இந்தியாவிற்கு முன்மாதிரியாக திகழ்ந்தது.

**பஞ்சாயத்து ராஜ்யம்**

ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ்யம் பற்றி பேசுவதற்கு வெகு காலம் முன்பு உள்ளாட்சி அமைப்பு களுக்கான 73 மற்றும் 74–வது அரசியல் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும் 17 ஆண்டுகளுக்கு முன்பே பஞ்சாயத்துகளுக்கு உரிய இடத்தை அளித்து முன்னோடியாக முன்மாதிரியாக ஜோதிபாசு தலைமை யிலான மேற்கு வங்க அரசு 1978 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என ஐந்து முறை தேர்தலை நடத்திய பெருமை உண்டு. 18 வயதில் வாக்குரிமை என்பதை முதன்முதலில் பஞ்சாயத்து தேர்தலில் அமலாக்கி வரலாற்றில் முத்திரை பதித்தது. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்கிற மூன்று அடுக்கு பஞ்சாயத்து முறை மேற்குவங்கத்தில் 1978 முதல் வெற்றிகரமாக செயல்படுத்தினார் ஜோதிபாசு.

சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை பாதுகாப்பதில் ஜோதிபாசு தலைமையிலான இடது முன்னணி அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இடது முன்னணி ஆட்சியில் மதச்சார்பற்ற ஜனநாயக செயல்பாடுகளில் முன்னேற்றம் காண்பது என்பது சிறுபான்மை இனத்தவர்களுக்கு குறிப்பாக மாநில மக்கள் தொகையில் 24 விழுக்காடாக இருக்கக்கூடிய முஸ்லிம்களுக்கு சமமான வாய்ப்பை அளித்துள்ளது. கல்வி, சுகாதாரம், விவசாயிகள் நலம், தொழிலாளர்கள் நலம், தலித்துகளும் பழங்குடிகளும் பெண்கள், சிறுபான்மையினர் நலமென அனைத்து வகையான துறைகளிலும் ஒவ்வொன்றாய் திட்டமிட்டு முன்னேற்றம் காணு வதில் ஜோதிபாசு தலைமையிலான மேற்கு வங்க இடதுசாரி அரசுக்கு நிகர் வேறு எதுவும் இல்லை

**மக்கள் ஒற்றுமை**

நாடெங்கும் தலித் மற்றும் பழங்குடிகள் மீது கொடும் தாக்குதல்கள் நிகழும்போது,ஜோதிபாசுவின் ஆட்சி யில் மேற்குவங்கம் விதிவிலக்காக அவர்களின் பாது காப்பு அரணாக வளர்ச்சிக்கு ஏணியாக இருந்தது என மண்டல் கமிஷன் அறிக்கை பாராட்டியுள்ளது. இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது நாடெங்கும் சீக்கியர்கள் தேடித் தேடி படுகொலை செய்யப்பட்டனர். மேற்குவங்க இடதுமுன்னணி அரசு தொழிலாளர்களும் விவசாயிகளும் கட்சி ஊழியர்களும் சீக்கியர்களை சுற்றி பாதுகாப்பு வளையம் அமைத்து பாதுகாத்தனர். அயோத்தி ரத யாத்திரையால் நாடு ரணகளம் ஆனது. சிறுபான்மையினர் கொல்லப்பட்டனர். மேற்கு வங்கம் சிறுபான்மையினரை பாதுகாத்து என ஜோதிபாசு மேற்குவங்கத்தில் முதலமைச்சராக இருந்த போது செய்த சாதனைகளை பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். இந்திய மக்களின் நெஞ்சங்களில் இடதுசாரி இயக்கத்தின் ஒப்பற்ற தலைவராக என்றென்றும் ஜோதிபாசு அணையா “ஜோதி” யாக வாழ்கிறார்.

## *1,700 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்!*

இலங்கையில் ஏற்பட்டுள்ள டொலர் பற்றாக்குறையால், அத்தியாவசியப் பொருட்களை ஏற்றி வந்த சுமார் 1,700 கொள்கலன்கள் அவற்றை இறக்க முடியாது கொழும்பு துறைமுகத்தில் கடந்த இரண்டு மாதங்களாக முடங்கிக் கிடப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த நிலை பற்றிக் கருத்துத் தெரிவித்த அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம், இந்தப் பொருட்களுக்குச் செலுத்த வேண்டிய டொலர்களை இலங்கை மத்திய வங்கி சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு வழங்காமை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருடனும், அதிகாரிகளுடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், உரிய பலன் கிட்டவில்லை எனவும் மேற்படி சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. இதன் காரணமாகவே அத்தியாவசிய பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, டொலர் தட்டுப்பாடு காரணமாக சீமெந்து உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாததால், நாட்டின் சீமெந்து தேவைக்கான அளவைத் தம்மால் உற்பத்தி செய்யவோ, வழமை போல மேலதிக தேவைக்கு சீமெந்தை இறக்குமதி செய்யவோ முடியவில்லை எனவும், இதனால் சீமெந்துக்கு தட்டுப்பாடும் விலையுயர்வும் ஏற்பட்டுள்ளதாக சீமெந்து உற்பத்தியாளர்கள் சங்கமும் தெரிவித்துள்ளது.

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# முஸ்லிம் சட்டத்தை நாம் மாற்ற முடியாது!

***-அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்***



**வெ**ளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கடந்த 19.1.2022 திகதி கொழும்பு சாஹிராக் கல்லூரியில் பேராசிரியர் பூர்க்கான் அவர்களது சேவையை பாராட்டி பூர்கானின் நிழற்படத்தினை திரை நீக்கிய பின் அங்கு உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

நீதியமைச்சர் அலி சப்றி தனது மகனின் உயர்கல்வி சம்பந்தமாக அமெரிக்கா சென்று இரு நாட்கள் அவர் அங்கு தங்க வேண்டியிருந்தமையால் பேராசிரியர் பூர்க்கான் அவர்களின் 50 வருடங்கள் இக்கல்லூரியின் சேவை மற்றும் அவரது நிழற்படம் திரை நீக்கம் நிகழ்வில் என்னை கலந்து கொள்ளும்படி அலி சப்றி வேண்டிக் கொண்டார்.

ஒரு நாடு ஒரு சட்டம் பற்றி முஸ்லிம்கள் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அண்மையில் இலங்கையில் உள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் இது பற்றி கேட்டபோது அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன். அதில் திருமண வயதெல்லை 18 ஆக இருத்தல் வேண்டும். பங்களாதேஸ், இந்தோனேசியா, துருக்கி போன்ற நாடுகளில் கூட திருமண வயதெல்லை 18 ஆக உள்ளது. நமது முன்னோர்கள் ஏற்படுத்திய இந்த நாட்டின் தேசவழமைச் சட்டம், கண்டிய சட்டம், அதே போன்று முஸ்லிம் சட்டம், இவைகளை நாம் மாற்றியமைக்க முடியாது. அது அவ்வாறே இருத்தல் வேண்டும்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நான் உபவேந்தராக பதவி வகித்த காலத்தில் ஒரு பீடத்தின் பட்டதாரிகள் பட்டப்படிப்பினை நிறைவு செய்து வீடு செல்ல முன்னர் ஒரு வைபவத்தினை ஒழுங்குபடுத்தி என்னையும் அதிதியாக அழைத்தார்கள். நான் அதை ஏற்றுக் கொண்டேன். அதே பீடத்தில் உள்ள இன்னொரு மாணவக் குழு வேறாக ஒரு நிகழ்வினை ஒழுங்குபடுத்தி அவர்களும் என்னை அழைத்தார்கள். அப்போது நான், எல்லோரும் இணைந்து ஒரு நிகழ்வினை ஏற்படுத்தினால் நல்லது எனத் தெரிவித்தபோது, அம் மாணவர்கள் சிங்கள மொழி மூலம் நடைபெறும் நிகழ்வுகள் எங்களுக்கு விளங்காது, அவர்களது மொழி எங்களுக்கு தெரியாது, அவர்களுக்கு நாங்கள் பேசும் மொழி தெரியாது, அதற்காகவே எங்களது கலை கலாச்சார முறைப்படி தமிழ் மொழியில் நாங்கள் வேறாக ஒரு நிகழ்வினை ஏற்படுத்தினோம் எனக் கூறினார்கள்.

ஆகவே தான் பாடசாலைக் கல்வியிலிருந்து மாணவர்களை தமிழ் பாடசாலை, பௌத்த பாடசாலை, முஸ்லிம் பாடசாலை என மொழி ரீதியாகவும் இன ரீதியாகவும் பிரித்து வைத்துள்ளார்கள். இதனால் பல்கலைக்கழகத்திற்குள் கற்கும் பட்டதாரிகளாகியும் அடுத்தவரது மொழி தெரியாமல் உள்ளது. அடிமட்டத்தில் மொழிப் பிரச்சனைகள் தீர்க்கப்படல் வேண்டும். சகல மாணவர்களும் ஒரே கூரையின் கீழ் இருந்து மற்றவர்களது இன, மத, மொழி, கலை கலாச்சாரத்தினை அறிந்து கொள்ளக்கூடியதாக, அவர்களது பிரச்சினைகளை பேசித் தெரிந்து கொள்ளக் கூடியவாறு நமது கல்வித் திட்டம் அமைந்ததாக இருக்கவில்லை. அண்மையில் நான் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் சென்றபோது, அங்கு பலக்லைக்கழக கலாநிதிகள் – அதிகாரிகள் எனவும், – தமிழ் – முஸ்லிம் – பௌத்தம் - கிறிஸ்த்தவம் எனவும், இன ரீதியாகவே பாடசாலை அதிபர்களும் பாடசாலைகளும் பிரிக்கப்பட்டு உள்ளது. ஒரு கருத்து அடிப்படையில் அவர்கள் பிரச்சினைகள் இருக்கவில்லை. பன்மொழி பேசுகின்ற நமது நாட்டில் அடிமட்டத்திலிருந்து இந்த மொழிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஜெஸிமா இஸ்மாயில், பேரியல் அஷ்ரப் – இவர்களுடன் மொழி, இன ஐக்கியம் தேசிய நல்லிணக்கம் பற்றி பலமுறை பல நிகழ்வுகளில் நான் கலந்து அவர்களுடன் பேசியிருக்கின்றேன். இந்த சாஹிராக் கல்லூரியிலும் ஒரு நிகழ்வில் கலந்து கொண்டிருக்கிறேன். ஜெஸிமா இஸ்மாயிலின் கணவர் ஒரு சிறந்த வைத்தியத்துறைப் பேராசிரியர். நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உபவேந்தராக பதவி வகித்த காலத்தில் பேராசிரியர் இஸ்மாயில் மருத்துவத்துறையின் தலைவராக இருந்தார். பல விடயங்களை அவருடன் நான் கலந்து ஆலோசித்துள்ளேன்.

இஸ்லாம், குர்ஆன், போன்றவற்றையும், ஹதீஸ் - முஹம்மத் நபி வாழ்க்கை முறை பற்றியும், குர்ஆன் மொழிபெயர்ப்புக்களையும் நன்கு படித்துள்ளேன். இஸ்லாம் மதம் ஒரு சாந்தி, சமாதானமானதொரு மார்க்கமாகும். முஹம்மத் நபி ஸல் அவர்கள் ஒரு பிரச்சினையை சுயமாகப் பேசி, அவர் அதனைக் கூடி ஆராய்ந்து மசூரா முறையில் தீர்மானம் எடுக்கும் முறை பற்றியும் நான் அறிந்துள்ளேன். அதில் ஹதிஸ் கிரந்தங்களை நான் கற்றதில் ஞாபகத்தில் உள்ள இரண்டு ஹதீஸ்கள் வருமாறு:

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# மாஓவின் மருமகள் 92 ஆவது வயதில் காலமானார்!



Liu Siqi　　Mao Anying

சீன மக்களின் மாபெரும் தலைவர் மாஓ சேதுங் அவர்களின் மூத்த புதல்வர் மாஓ அன்யிங் (Mao Anying) அவர்களின் துணைவியார் லியு சிஸி (Liu Siqi) அவர்கள் தமது 92 ஆவது வயதில் ஜனவரி 07 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) காலமானதாக அறிவிக்கப்பட்டது. அவருக்கான துக்க தினம் அடுத்த நாள் சனிக்கிழமை சீனா முழுவதும் அனுட்டிக்கப்பட்டது.

அவருடைய கணவர் (மாஓவின் மகன்) 1950 – 53 காலகட்டத்தில் அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெற்ற கொரிய மக்களின் தேசிய விடுதலைப் போரில் பங்குபற்றச் சென்ற போது அங்கு மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பொழுது லியுவின் வயது 28 மாத்திரமே!

மாஓவின் மருமகள் லியுவை அவரது கணவர் பிரிந்து கொரிய யுத்தத்துக்குச் செல்லும் போது அவர்களுக்குத் திருமணமாகி ஓராண்டே நிறைவடைந்திருந்தது. லியு அவர்கள் ஒரு அழகிய எழுத்துக் கலை நிபுணரும் (Calligrapher) ஆவார். 2020 ஆம் சீன மத்திய தொலைக்காட்சி நிறுவனம் “சமாதானத்தின் நிமித்தத்துக்காக” (For Peace's Sake) என்ற தலைப்பில் லியு சம்பந்தமான விவரணப் படம் ஒன்றைத் தயாரித்திருந்தது. அதில் லியு அவர்களும் தோன்றியிருந்தார். அந்தப் படத்தில் லியு தனது கணவருக்கு கடைசியாக விடை கொடுக்கும் காட்சியும் இடம் பெற்றுள்ளது.

லியுவின் மரணம் சம்பந்தமாக சீனாவின் அனைத்து ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிட்டிருந்தன. அந்த செய்திக்கு “தோழர் லியு காலமாகி விட்டார்” எனத் தலைப்பிடப்பட்டிருந்தது. சீனாவின் பிரசித்தி பெற்ற இணையத்தளமான ‘சைனா வெய்போ’ (Sinna Weibo) வெளியிட்ட அந்தச் செய்தியை 2.47 மில்லியன் பேர் பார்வையிட்டிருந்தனர். அதில் குறிப்பெழுதிய ஒருவர், “கடைசியாக லியு தனது கணவர் மாஓ அன்யிங்கை சந்தித்து விட்டார். எங்கள் நாட்டைப் பாதுகாப்பதற்காக உங்கள் கணவர் செய்த தியாகத்தை சீன மக்கள் ஒருபோதும் மறக்கவில்லை என்று உங்கள் கணவரிடம் கூறுங்கள். அதேபோல, சீனா இப்பொழுது பலம் மிக்க, செழிப்பான நாடாக மாறியுள்ளது என்பதையும் மாஓ சேதுங்கிடம் கூறுங்கள்” என உணர்ச்சி ததும்ப குறிப்பிட்டுள்ளார்.

கொரிய மக்களின் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உதவுவதற்காக 1949 இல் புதிதாகத் தோன்றியிருந்த சோசலிச சீனா, பல இலட்சம் தொண்டர்களை அனுப்பியிருந்தது. அவர்களில் சுமார் 2 இலட்சம் பேர் அந்தப் போரின் போது வீர மரணத்தைத் தழுவிக் கொண்டனர். அவர்களில் மாஓவின் மூத்த புதல்வரும் ஒருவர். மாஓவின் புதல்வர் உடல் உட்பட வீர மரணம் அடைந்த அனைத்து சீனத் தியாகிகளினதும் உடல்கள் கொரிய மண்ணிலேயே அடக்கம் செய்யப்பட்டன.

---

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

“ஓர் ஊழியனிடம் இருந்து நாம் வேலை வாங்கினால் அவனது வியர்வை வற்றிவிட முன் அவனுக்குரிய ஊதியத்தைக் வழங்குங்கள்.”

“ஒரு வீட்டில் கறி சமைக்கும் போது அதன் முதலாவது கறிக் கோப்பையை நமது அடுத்த வீட்டில் வாழும் குடும்பத்துக்கு முதலில் பகிர்ந்தளியுங்கள்.”

பேராசிரியர் புர்கான் அவர்கள் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர், பழைய மாணவத் தலைவர், ஆளுநர் சபைத் தலைவர் போன்ற பல பதவிகளை இக் கல்லூரியில் வகித்து, கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டதொரு பேராசிரியர். ஆவர் தனது பெயரில் இங்கு வகுப்பறைகளை நிர்மாணித்துள்ளார். அதிபராக பதவி வகித்த காலத்தில் ஊதியம் பெறாமலும், தமது சொந்த நிதியில் 50 ஆயிரம் மாதம் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கி கல்விக்கு உதவி செய்துள்ளார் என பேராசிரியர். ஜீ.எல். பீரிஸ் கூறினார்.

**11ம் பக்கத்தொடர்ச்சி...**

ஒரு உள்ளூர் சீமெந்து உற்பத்தி நிறுவனம் கருத்துத் தெரிவிக்கையில், தமது நிறுவனம் மாதாந்தம் 230,000 மெட்ரிக் தொன் சீமெந்தை உள்நாட்டில் உற்பத்தி செய்ததுடன், 20,000 மெட்ரிக் தொன் சீமெந்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தும் வந்ததாகவும், ஆனால் டொலர் பற்றாக்குறையால் வழமையான இந்த நடவடிக்கைகளைத் தொடர முடியாமல் இருப்பதாகவும் கூறியுள்ளது.

“ஒரு மிகச் சாதாரண நட்சத்திரத்தின் மிகச் சிறிய கிரகத்தில் வாழும் சற்றே முன்னேறிய குரங்கினம் தான் நாம் ”

“வாழ்க்கை உள்ளவரை நம்பிக்கைக்கும் இடம் உண்டு”

“எனக்கு கடவுள் மீது பயம் இல்லை. அவரை நம்பியவர்கள் மேல்தான் பயமே”

“என்னுடைய இலக்கு எளியது தான். அது இப்பிரபஞ்சத்தை முழுமையாக புரிந்து கொள்வதுதான். அது ஏன் இப்படி இருக்கிறது? எதற்காக இப்படி இருக்கிறது?”

“நாம் பூமியைத் தவிர வேறு எங்கேனும் வாழ்வதற்கு முயற்சி எடுக்கவில்லை என்றால், ஆயிரம் வருடத்திற்கு பிறகு மனித இனம் என்பது ஒன்று இருக்கவே இருக்காது”

**–ஸ்டீபன் ஹாக்கிங் (stephan Hawking)**

**முன்பக்கத்தொடர்ச்சி…**

மக்கள் மீது இராணுவ ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது.

ஒரு பக்கத்தில் ஜே.ஆரின் ஆட்சியில் அமெரிக்க சார்பான போக்கு அதிகரித்தமையும், மறுபக்கத்தில் இந்தியாவின் தமிழ் நாட்டு மக்களுடன் இரத்த உறவைக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர்கள் ஜே.ஆரின் அரசால் இராணுவ ஒடுக்குமுறைக்கு உள்ளானமையும், அமெரிக்க வல்லரசின் போட்டியாளரான சோவியத் யூனியனுடன் நெருங்கிய நட்புறவைக் கொண்டிருந்த இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசை நெருக்கடியிலும் வெறுப்பிலும் ஆழ்த்தியது.

எனவே, ஜே.ஆரின் அரசை அமெரிக்காவின் பிடியிலிருந்து தன் வழிக்குக் கொண்டு வரும் ஒரு உத்தியாகவும், தமிழ் நாட்டு மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடனும் இந்திரா காந்தி அரசு இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இந்தியா சென்று ஆயுதப் பயிற்சிகள் பெறவும், அதன் மூலம் ஜே.ஆர். அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தைக் கொண்டு நடத்தவும் உதவிகள் வழங்கியது. இருந்தும் ஜே.ஆர். அரசு எதற்கும் அடிபணியாது தமிழ் பிரதேசங்களில் தனது மிலேச்சத்தனமான இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் பிரதமர் இந்திராகாந்தி தனது சீக்கிய மெய்ப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து அவரது மகன் ராஜீவ் காந்தி பிரதமர் பதவிக்கு வந்தார். அவரது காலத்தில் இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதும், இலங்கை அரசு தனது இராணுவவாதப் போக்கை தொடர்ந்தும் முன்னெடுத்து வந்தது.

இந்த நிலைமையில்தான் இந்தியா ஜே.ஆரின் அரசை நிர்ப்பந்தித்துப் பணிய வைத்து 1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் ஒப்பந்தமொன்றைச் செய்தது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் அரசியல் யாப்பில் திருத்தம் செய்யப்பட்டு மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. அந்தத் திருத்தம் 13 ஆவது திருத்தச் சட்டம் என அழைக்கப்பட்டது.

இந்தத் திருத்தத்தின் மூலம் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைந்த வட கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டது. இந்த மாகாண சபையின் அமைவு இனப் பிரச்சினைக்கான ஓரளவான அதிகாரப் பகிர்வாகப் பார்க்கப்பட்டது. மாகாண சபை முறைமை ஏறத்தாழ இந்தியாவின் மாநில அரசு முறையை ஒத்ததாக நோக்கப்பட்டது. அதே நேரத்தில், இலங்கையின் ஏனைய ஏழு மாகாணங்களுக்கும் தனித்தனி மாகாண சபைகள் அமைக்கப்பட்டு, அவை பிராந்திய ரீதியிலான அதிகாரப் பகிர்வாக நோக்கப்பட்டது.

மாகாண சபைகளை உருவாக்கிய இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் இலங்கைத் தரப்பில் எந்தவொரு தமிழ் தலைமையும் கையொப்பம் இடவில்லை. இலங்கை அரசும், இலங்கைத் தமிழர்கள் சார்பாக என்று கருதக்கூடிய அளவுக்கு இந்திய அரசுமே கையெழுத்திட்டன. அதன் காரணமாகவே, அதுவரை காலமும் இனப் பிரச்சினை சம்பந்தமாக செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் இந்த ஒப்பந்தம் மட்டுமே அரசியல் அமைப்பு ரீதியாக ஏற்கப்பட்டு நடைமுறைக்கும் வந்தது. இந்தியா தலையிட்டிருக்காவிட்டால், இத்தகைய ஒரு ஒப்பந்தம் கூட வருவதற்கு வாய்ப்பே இருந்திருக்காது. மாகாண சபைகள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு முழுமையான தீர்வல்ல என சில பகுதியினர் வாதிட்டாலும், அம்மணமாக நின்ற தமிழர்களுக்கு இடுப்பில் சுற்ற ஒரு துண்டாவது கிடைத்தது என்ற வகையில் அதன் பெறுமானத்தை எவரும் ஏற்காமல் இருந்துவிட முடியாது.

ஆனால், துரதிஸ்ட்டவசமாக தனிநாடு கோரி போராடிய பிரதான இயக்கங்களில் ஒன்றான விடுதலைப் புலிகள் மாகாண சபைகளை ஏற்காததுடன், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை அது செய்யப்பட்ட பொழுது பிரதமராக இருந்து எதிர்த்த ஆர்.பிரேமதாசவுடன் சேர்ந்து இலங்கையில் மாகாண சபை செயற்பாட்டை உறுதிப்படுத்த வந்திருந்த இந்திய அமைதிப்படையுடன் போர் புரிந்ததுடன், பிரேமதாச மூலம் இந்திய அமைதிப்படையைத் திருப்பி அனுப்பி, வட கிழக்கு மாகாண சபையையும் இயங்காமல் செய்தனர். அது மட்டுமல்லாமல், மாகாண சபைகளை ஆதரித்து நின்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான அ.அமிர்தலிங்கத்தையும் சுட்டுப் படுகொலை செய்தனர். அதன் மூலம் பிரதான தமிழ் கட்சியின் ஆதரவை மாகாண சபைகளுக்கு இல்லாமல் செய்தனர். முக்கியமாக தமிழரசுக் கட்சி மாகாண சபைக்கான ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டு புலிகளின் முன்னால் பெட்டிப்பாம்பாக அடங்கிக் கொண்டது. அது மாத்திரமின்றி, முன்னர் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பி மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றிய ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் இயக்கங்கங்களும் மாகாண சபைக்கான ஆதரவைக் கைவிட்டு புலிகளின் குண்டாந்தடிக்குப் பயந்து அவர்களின் பின்னால் சென்று விட்டனர்.

இந்த சூழல், மாகாண சபை முறைமையை இல்லாதொழித்து ஒற்றையாட்சியையும், சிங்களப் பேரினவாதத்தின் மேலாண்மையையும் திரும்பவும் நாட்டில் வலுப்படுத்த எதிர்பார்த்திருந்த சிங்கள இனவாத சக்திகளுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. அத்தகைய ஒரு சூழலை உருவாக்கியதில் புலிகளுக்கும் அவர்களை ஆதரித்து நின்ற தமிழ் கட்சிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பாத புலிகள், தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் நழுவவிட்டு, ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து, தனிநாடு அமைக்கும் முயற்சியில் விடாப்பிடியாக நின்று, இறுதியில் 2009 ஆம் ஆண்டு இலங்கை அரசால் அழிக்கப்பட்டு விட்டனர். மறுபக்கத்தில் மாகாண சபை தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்று சொல்லிக்கொண்டு புலிகளின் வாலில் தொங்கிய தமிழ் கட்சிகளும் மாகாண சபைக்கு மேலாக எதையும் பெற முடியாத கையறு நிலையில், ஈரொட்டு வியாபாரம் செய்பவர்கள் போல, மக்களிடம் தேர்தல் காலங்களில் வாய்க்கு வந்த பொய்களைச் சொல்லி வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டனர்.

இந்த நிலைமையில்தான் தற்போதைய அரசாங்கம் இலங்கைக்கு புதிய அரசியல் அமைப்பொன்றை வரையும் பணியில் விரைந்து செயற்பட்டு வருகின்றது. அந்த அரசியல் சாசனம் அமுலுக்கு வரும்போது, பெரும்பாலும் மாகாண சபை முறைமை இல்லாமல் செய்யப்பட்டுவிடும் என்ற கருத்து பரவலாக அரசியல் அரங்கில் நிலவுகின்றது. அப்படி நடந்தால்,

தமிழர்கள் இடையில் சுற்றியிருந்த துணையும் இழந்து அம்மணமாக நிற்கும் நிலை ஏற்படும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான், காலம் கடந்த சூழ்நிலையில், திடீர் ஞானம் வந்தது போல, தமிழ் கட்சிகள் சில ஒன்றுகூடி மாகாண சபைகளை முழு அதிகாரங்களுடன் இயங்குவதற்கு இலங்கை அரசை வலியுறுத்தும்படி இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி இருக்கின்றனர். மாகாண சபைகள் உருவாவதிற்கு இந்தியா முக்கிய பங்களிப்பு செய்தது என்ற வகையில் இந்தியாவுக்கு கடிதம் எழுதுவதில் தவறில்லை. ஆனால் இவர்கள் செய்த மாபெரும் தவறு என்னவென்றால், இந்தியாவின் ஆதரவை நாடுவதற்கு முன்பாக இலறங்கை அரசுடன் அது பற்றிப் பேசியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் நேரடியாக இந்தியாவை அணுகியதின் மூலம் அரசாங்கம், தென்னிலங்கை அரசியல் கட்சிகள், சிங்களப் பொதுமக்கள் ஆகியோரின் சந்தேகத்தையும் வெறுப்பையும் தூண்டி விட்டுள்ளனர்.

அடுத்ததாக, இலங்கை அரசாங்கம் புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் போது, அதில் சிறுபான்மை இனங்களின் உரிமைகளையும் உத்தரவாதம் செய்யும் சரத்துகளையும் உள்ளடக்கக் கூடியதாக தமிழ் கட்சிகள் கூட்டாக முயற்சி எடுத்திருக்க வேண்டும். அதற்கு ஆதரவளிக்கக் கூடிய ஏனைய சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும், தென்னிலங்கைக் கட்சிகளையும் திரட்டியிருக்க வேண்டும். ஆனால் தமிழ் கட்சிகள் அவ்வாறான முயற்சிகள் எதிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

இதற்கெல்லாம் ஒரேயொரு காரணம், பிச்சைக்காரனின் புண் போல, தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்ந்து விடாமல் தமக்கு அரசியல் வாழ்வளிக்கும் நித்திய சஞ்சீவியாக நிலைமை தொடர வேண்டும் என தமிழ் தலைமைகள் விரும்புவதைத் தவிர வேறு காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

# சீனாவிலிருந்து இராட்சத துளையிடும் இயந்திரங்கள்!

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட இரண்டு இராட்சத சுரங்கம் துளையிடும் இயந்திரங்கள் (Giant Tunnel Boring Machines) இவ்வருடம் ஏப்ரல் மாதமளவில் இலங்கைக்கு வந்து சேரும் என மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

சீன முதலீட்டு நிறுவனங்களால் இலங்கையில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் பயன்படுத்துவதற்காகவே இந்த இயந்திரங்கள் கொண்டு வரப்படுகின்றன. இந்த இயந்திரங்களின் விட்டத்தின் அளவு 7.6 மீட்டர்களாகும்.

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தின் கால்வாய்கள் அமைக்கும் பணியில் சீன நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 675 அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளுக்கே அந்த வங்கி இந்தப் பணத்தை வழங்கியுள்ளது. திட்டத்தின் இரண்டாம் கட்டம் பற்றி ஆய்வு செய்த பின்னர் வங்கி மேலும் நிதி வழங்குவது பற்றி முடிவு செய்யும் என மகாவலி திட்ட அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து நிதி பெறுவது சம்பந்தமாக இலங்கை அரசு இரண்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது.

சீன நிறுவனங்கள் மகாகித்துல சுரங்கப்பாதை (Mahakithula Access Tunnel), மகாகித்துல நீர்த்தேக்கம் (Mahakithula Storage Reservoirs), மகாகித்துல நீர்த் தேக்கத்திலிருந்து மகாகிரு (Mahakiru) நீர்த் தேக்கத்துக்கு நீர் வழங்கும் கால்வாய் என்பனவற்றை அமைப்பதற்கான திட்டங்களைச் சமர்ப்பித்து அதற்கான ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளன.

இந்த பிரதான திட்டங்கள், மேல் எலஹெர (Elahera) கால்வாய் திட்டம், வட மேல் (North West) மாகாண கால்வாய் திட்டம், மினிப்பே (Minipe) இடது கரை கால்வாய் புனரமைப்புத் திட்டம் என்பனவாகும். இவையாவும் 2025 இல் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டங்கள் பூர்த்தியானால், வட மேல், வட மத்திய, மத்திய மாகாணங்களில் பயிர்செய்கை நிலங்களை மேலும் விஸ்தரிப்பதற்கு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது. 158 கிலோ மீட்டர் நீளமான இந்தக் கால்வாய்களில் 38 கிலோ மீட்டர் நீளமானவை சுரங்கவழி கால்வாய்களாகும். அமைக்கப்படும் இரண்டு நீர்த்தேக்கங்களினதும் நீர் கொள்ளளவு 36 மில்லியன் கியூபிக் மீட்டர்களாகும். புனரமைக்கப்படும் மினிப்பே இடது கரை வாய்க்காலின் நீளம் 74 கிலோ மீட்டர்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

"வாசித்தல் மற்றும் மேலும் மேலும் அதிக அறிவைப் பெறுதல் என்பதைவிட சிறந்தது எதுவும் இல்லை"

"கடவுள் இல்லை என்பதை ஒருவராலும் நிரூபிக்க முடியாது. ஆனால் விஞ்ஞானம் கடவுளை தேவையற்றதாக ஆக்குகிறது. இயற்பியலின் விதிகளால் ஒரு படைப்பாளரின் தேவை இல்லாமல் பிரபஞ்சத்தை விளக்க முடியும்"

"பிரபஞ்சத்தின் அடிப்படை விதிகளில் ஒன்று எதுவுமே பூரணமானது அல்ல. பரிபூரணம் என்பது வெறுமனே இல்லை. அபூரணம் இல்லாமல், நீங்களோ நானோ இருக்க மாட்டோம்"

"விஞ்ஞான விதிகள் கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையில் வேறுபடுவதில்லை"

"நான் வளர்ச்சியடையாத குழந்தை போன்றவன். எப்போதும் 'எப்படி', 'ஏன்' என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். சிலவேளைகளில், நான் பதிலைக் கண்டுகொள்கிறேன்"

"நமது நடவடிக்கையின் உயரிய மதிப்பினை நாம் தேடிப்பெற வேண்டும்"

"அமைதியான மக்கள் ஒலிமிக்க மனதைக் கொண்டிருக்கிறார்கள்"

"மனித முயற்சிக்கு எவ்வித எல்லைகளும் இருக்கக்கூடாது"

"உழைப்பு உங்களுக்கு அர்த்தத்தையும் நோக்கத்தையும் கொடுக்கின்றது. உழைப்பு இல்லாத வாழ்க்கை வெறுமையானது"

"வாழ்க்கை வேடிக்கையானதாக இல்லாமல் இருந்தால், துன்பம் நிறைந்ததாக இருக்கும்"

"நாம் அறிவியலைப் புரிந்துகொள்வதற்கு முன், இந்த பிரபஞ்சம் கடவுளால் படைக்கப்பட்டது என்று நம்புவது இயற்கையானதே"

"கோபம், மனுக்குலத்தின் பெரும் தீமை. இது மனித நாகரீகத்தை அழிக்கும்"

**–ஸ்டீபன் ஹாக்கிங் (stephan Hawking)**

# காணிகளை விடுவிக்க டக்ளஸ் நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் காணிகளை பயிர்ச்செய்கை, பொருளாதார மேம்பாட்டு முயற்சிகளுக்காக விடுவிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திணைக்கள அதிகாரிகள் காணிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆராய்ந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளின்கீழிருக்கும், முன்னர் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டு பின்னர் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட காணிகள் தொடர்பான விபரமான பட்டியலுடன், மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் அவற்றை விடுவிப்பதற்கான கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சமர்ப்பித்திருந்தார்.

இதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த வேண்டுகோளை ஏற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ, இவைபற்றி ஆராய்ந்து பொருத்தமான காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு



காணி அமைச்சரைப் பணித்திருந்தார்.

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவின்கீழ், பொன்னகர், கண்ணகைபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளிலும், பூநகரி பிரதேச செயலக பிரிவில் ஜெயபுரம், பண்டிவெட்டி, கரியாலைநாகபடுவான், திக்குவில், பள்ளிக்குடா ஆகிய பகுதிகளிலும் உள்ள காணிகளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் செயலக அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்ட வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அவற்றில் விடுவிக்கப்படக்கூடிய காணிகள் பற்றி விரிவாக ஆராய்ந்து டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிக்கையிட்டனர்.

இதேபோல், கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் புளியம்போக்கணை, கல்மடு ஆகிய பகுதிகளுக்கும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் கோவில்வயல் பகுதிக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் இணைப்பாளர் வை.தவநாதன் தலைமையில் செயலக அதிகாரிகளுடன் சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்தக் காணிகளை விடுவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிக்கையிட்டனர்.

ஆனைவிடுந்தான், கண்ணகைபுரம், கரியாலைநாகபடுவான் ஆகிய பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்கும், பள்ளிக்குடா பகுதியில் புல் வளர்த்து கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் அனுமதிக்குமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்துள்ள அதிகாரிகள், ஏனைய கோரிக்கைகள் குறித்து மேலதிகாரிகளுடன் கலந்துரையாடி காலக்கிரமத்தில் அவற்றை விடுவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக அறிக்கையிடுவதாக டக்ளஸ் தேவானந்தாவிடம் உறதியளித்தனர்.

# சீன - இந்திய வர்த்தகம் 43.3 சத வீதம் அதிகரித்துள்ளது!

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் எல்லைப் பிரச்சினை, பிராந்திய ஆதிக்கம், வல்லரசுக் கூட்டு (அமெரிக்க – இந்திய) போன்ற விடயங்களில் ஏட்டிக்குப் போட்டியான நிலை நிலவினாலும், 2021 இல் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 125 பில்லியன் டொலர்களைத் தாண்டி, 2020 ஆம் ஆண்டை விட 43.3 வீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது. இதன் மூல் இந்தியா சீனாவுடன் பகைமை பாராட்டினாலும், சீனாவின் சந்தையில் தங்கி நிற்பதைக் குறைப்பது முடியாத விடயம் என்பது நிரூபணமாகியுள்ளது.

இந்தக் காலகட்டத்தில், இந்தியாவுக்கான சீனாவின் ஏற்றுமதி 97.52 பில்லியன் டொலர்களைத் தொட்டு 46.2 வீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது. அதே நேரம், சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 28.14 பில்லியன் டொலர்களைத் தொட்டு 34.2 வீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

இந்த விபரங்களை பொது சுங்க நிர்வாகம் வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள தகவல்களின்படி, இந்தியா 2021 இல் சீனாவின் 15 ஆவது மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக இருந்துள்ளது தெரிய வந்துள்ளது.

இந்தத் தகவல்களின்படி, இந்திய மருந்து உற்பத்துறையில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களில் 50 முதல் 60 வீதம் வரையானவை சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. மருந்து உற்பத்தி என்பது ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் முக்கியமான ஒரு துறை என்ற வகையில் இதுவோரு உச்சகட்ட வளர்ச்சியாகும். இந்தியாவில் சீன உற்பத்திகளைப் புறக்கணிக்க வேண்டும் என சிலர் காலத்துக்குக் காலம் இயக்கங்களை நடத்தினாலும், அதற்கு மாறாக இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் ஆண்டு தோறும் வளர்ந்து வருவதையே காண முடிகிறது. உள் நோக்கங்கள் கொண்ட அரசியல்வாதிகளின் பிரச்சாரங்கள் எப்படியிருந்த போதிலும், யதார்த்தம் என்பது தன் வழியிலேயே பயணித்து வருவதையே இந்த நிலைமை எடுத்துக் காட்டுகிறது.